# பாட்டாளி

இதழ்: 1
மலர்: 2
புரட்டாதி: 1
(78-09-01)
50 சதம்

புரட்சிகர வெகுஜன ஏடு


★ மா விலை அதிகரிப்பால் அரிசி விலை உயர்ந்தது!

★ பொருட்கள் தாராளம்! பொதுமக்கள் நிலையோ பரிதாபம்!!

# புதிய அரசியல் சாசனத்தால் மக்களின் பிரச்சினைகள் தீராது!

**இதுவரை நடைமுறையில் இருந்து வந்த அரசியல் சாசனங்கள் யாவும் ஆளும் வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை நீடித்து வைத்திருப்பதையும், மக்களின் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதையும் குறிக்கோள்களாகக் கொண்டிருந்தன. அவை எவ்விதத்திலும் சாதாரண உழைக்கும் மக்களின் அபிலாஷைகளையோ, அல்லது தேவைகளையோ பிரதிபலிக்கவில்லை. இன்று "தார்மீகத்தின்" பெயரால் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசியல் சாசனமும் அவ்வாறனதேயாகும்.**

அந்நியர்கள் நம்மை ஆளத் தொடங்கிய காலம் தொட்டு இன்று வரை காலத்திற்குக் காலம் பல அரசியல் சாசனங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவற்றில் காலத்திற்குக் காலம் பல திருத்தங்கள் செய்யப்பட்டும் வந்துள்ளன. ஆனல் கூட்டு மொத்தத்தில் இச் சாசனங்களின் மூலம் இலங்கை மக்கள் பெற்ற பலாபலன்கள் என்ன என்பதே முக்கியமானதாகும்.

நீதி நியாயம், சட்டத்தின் முன் சகலரும் சமம், மக்களின் இறமை, பேச்சு-எழுத்துச் சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிசம் என்பன போன்ற சொற்றொடர்களை தாராளமாக அரசியல் சாசனங்களிலே எமது மக்கள் கண்டிருக்கின்றனர். ஆனல் அவர்கள் வாழ்வில் அனுபவித்ததோ அல்லது இன்றும் அனுபவித்துக் கொண்டிருப்பதோ வறுமை, பிணி, துன்பம், வேலையின்மை, விரக்தி, போன்றவற்றைத் தான். அரசியல் சாசனங்கள் பலத்த விவாதங்களின் மத்தியில் நிறைவேற்றப்பட்டு மிகவும் ஆடம்பரமான ஆரம்பத்துடன் அமுலாக்கப்படுகின்றன. இவற்றில் எமது மக்கள் எதுவித பலனையும் பெறவில்லை. ஏனெனில் எந்த வர்க்கத்தினல் ஒரு அரசியல் சாசனம் முன்வைக்கப்படுகின்றதோ அந்த வர்க்கத்தின் அபிலாஷைகளும், நலன்களும் தான் அதில் பிரதிபலிக்க முடியும். இதற்கு இன்றைய புதிய சாசனம் எவ்விதத்திலும் விதிவிலக்கானதல்ல.

இன்று 'தார்மீகத்தின்' பெயரரல் உருவாக்கப்பட்டுள்ள அரசியல் சாசனம் மிகவும் அப்பட்டமாகவே ஆளும் வர்க்கத்தின் நலன்களை பாதுகாத்து முன்னெடுப்பதைப் பிரகடனம் செய்கின்றது. அது மட்டுமன்றி இதுவரை காலமும் முதலாளித்துவ வரையறைகளுக்குள் வழங்கப்பட்டிருந்த அற்ப சொற்ப ஜனநாயக உரிமைகளையும் அப்படியே விழுங்கியுள்ளது. தனிநபர் சர்வாதிகாரத்தை ஸ்திரப்படுத்தவும், சர்வசன வாக்கெடுப்பு என்ற போர்வையில் மக்களின் சகல விதமான சுதந்திரங்களை மறுக்கவும் புதிய அரசியல் சாசனம் வழி வகுத்துள்ளது. வெளிநாட்டு மூலதனத்திற்கு கொடுத்திருக்கும் உத்தரவாதமும், உறுதிப்பாடும், தேவை ஏற்படின் அம்மூலதனத்தைப் பாதுகாக்க அந்நியப் படைகள் கூட எமது நாட்டிற்குள் வர அனுமதிப்பது என்ற நிலைமையால் நமது மக்களின் சுதந்திரத்திற்கும், நமது நாட்டின் சுயாதிபத்தியத்திற்கும் பெரும் சவால் விடப்பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

# ஹர்த்தால் எழுச்சியில் இருந்து

## இடதுசாரிகள் சரியான பாடங்களைப் படிக்கவில்லை

### — ஹர்த்தால் கூட்டத்தில் தோழர் செந்தில்

நகரப்புறத் தொழிலாளி வர்க்கத்துடன் கிராமப்புற மக்களும் ஐக்கியப்பட்டு பொது எதிரியான யூ. என். பி. க்கு எதிராக எழுந்த வலுவான எழுச்சியே மகத்தான ஹர்த்தாலாகும். 1953 ம் ஆண்டு ஹர்த்தால் வீரம் மிக்க வெகுஜனங்களின் எழுச்சியாகும். அந்த எழுச்சியின் மூலம் யூ. என். பி. கட்சி பல பாடங்களைப் படித்துக் கொண்டது. அதனல்தான் இப்பொழுது அவ்வாறன எழுச்சி ஒன்று வருவதற்கு முன்பே தன்னைத் தயார்ப்படுத்தி வருகின்றது. ஆனல் அந்த வீரம் மிக்க வெகுஜன எழுச்சிக்கு தலைமை தாங்கிய இடதுசாரிகள் அப்போராட்டத்தின் உண்மையான அனுபவங்களிலிருந்து பாடங்கள் படித்துக் கொள்ளவில்லை. அவர்கள் ஒரு வெகுஜன எழுச்சியின் ஆற்றலைப் புரிந்து கொள்ளவில்லை. அவ்விதமான எழுச்சியை எவ்வாறு பாதுகாத்து எந்த நோக்கத்திற்கு முன்னெடுப்பது என்பதையும் புரிந்துகொள்ளவில்லை. இதனல் வெகுஜனங்களிடமிருந்து குறிப்பாக கிராமப்புற மக்களிடமிருந்துபிரிந்து ஒதுங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த மாபெரும் எழுச்சியை, அதில் மக்கள் காண்பித்த வீரதீரங்களை இடதுசாரிக் கட்சிகள் பாராளுமன்ற ஆசனங்களுக்கு பாவிக்க முற்பட்டதால் அவர்கள் தனிமைப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே ஹர்த்தால் எழுச்சியின் உண்மையான தன்மைகளையும் நோக்கங்களையும் சரியான அனுபவங்களாகக் கொண்டு மக்கள் மத்தியில் வேலை செய்தால் மீண்டும் அவ்வாறன வெகுஜன எழுச்சியை உருவாக்க முடியும். அவ்வாறன எழுச்சியினல் தான் மக்களது விமோசனத்திற்கான பாதையில் செல்ல முடியும்.

(8-ம் பக்கம் பார்க்க)

# ஆகஸ்ட் கலவரம் மீண்டும் வேண்டாம்!

கடந்த வருடம் ஆகஸ்ட் கலவரம் நடைபெற்று சரியாக ஒரு வருடம் முடிவடைந்து விட்டது. அக் கலவரத்தால் தமிழ்-சிங்கள மக்கள் அனுபவித்த துன்பங்களும் கஷ்டங்களும் பல வழிகளில் இன்றும் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன. ஆகஸ்ட் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மக்கள். பலனடைந்தவர்கள் இனவாத-முதலாளித்துவ அரசியல் வாதிகளும் அவர்களது சொத்துடைய வர்க்கத்தினருமேயாவர். ஆதலால் மீண்டும் ஒரு ஆகஸ்ட் கலவரம் வேண்டாம் என்றே இரு இனமக்களும் வேண்டுகின்றனர். இன்று தினசரிப் பத்திரிகைகளில் வருபவற்றைப் படித்துப் பார்க்கும் போது மீண்டும் ஒரு ஆகஸ்ட் கலவரம் வந்து விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. ஆகஸ்ட் கலவரத்தின் போது நடைபெற்ற சம்பவங்கள் மீட்கப்பட்டு இரு இன மக்கள் மத்தியிலும் உள்ளூரவே கசப்பு உணர்ச்சிகள் வளர்க்கப்படுவதையே அவதானிக்க முடிகின்றது. இரு இன மக்கள் மத்தியிலும் இனவாதத் தீயை வளர்ப்பதற்கு பல்வேறு ரூபங்களில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இவற்றை அவதானிக்கும் போது ஆகஸ்ட் கலவரம் போல் மீண்டும் ஒரு கலவரம் வராது தடுப்பதற்கான முயற்சிகளா? அல்லது அப்படி ஒரு கலவரம் ஆரம்பித்து வைக்கப்படுவதற்கான முயற்சிகளா? என்ற சந்தேகத்தையே உருவாக்குகின்றன.

இவ்விதமான சூழ்நிலையில் இரண்டு இனங்கள் மத்தியிலும் உள்ள முற்போக்கு புரட்சிகர சக்திகள், நேர்மையான தேசபக்த சக்திகள் மிகவும் விழிப்பாக இருந்து மீண்டும் ஒரு கலவரம் ஏற்படுவதையோ அல்லது அதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படுவதையோ எதிர்த்து வேலை செய்ய வேண்டும். இன்று பொது எதிரியான யூ. என். பி. யின் மக்கள் விரோத நடவடிக்கைகளை இன மத பேதமின்றி வர்க்க ரீதியில் ஐக்கியப்பட்டு எதிர்க்க வேண்டிய அவசியத்தை இரு இன மக்கள் மத்தியிலும் உள்ள முற்போக்கு புரட்சிகர சக்திகள் தீவிரமான பிரசாரத்தின் மூலம் முன்னெடுக்க வேண்டும். அத்துடன் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படல் வேண்டும் என்பதையும் தென் இலங்கை மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்லல் அவசியமானதாகும். இவ்விதமான வேலைகளால் மீண்டும் ஒரு ஆகஸ்ட் கலவரம் ஏற்படுவதையோ அல்லது அதற்கான தூபமிடப்படுவதையோ தடுக்க முடியும்.

**மக்கள் தமது தேவைகளுககுத் தாமே போராட முன்வரல் வேண்டும்!**

### புதுயுகம் பிறக்க

கொடுமைகள் ஒழிய வேண்டில் கிளர்ச்சிகள் ஓங்கவேண்டும்
மிடிமைகள் மடிய வேண்டில் மீட்சியைக் காணவேண்டும்
அடிமைகள் என்ற சொல்லே அவனியில் அழியவேண்டும்
புதுமைகள் மலர வேண்டும் புதுயுகம் பிறக்கவேண்டும்!

# தோட்டத்தொழிலாளருக்கு பசி! தொண்டமானுக்கு பதவி!!

தோட்டத் தொழிலாளர்களின் மிகவும் முக்கியமான உணவுப் பொருள் கோதுமை மாவாகும். யு. என். பி. பதவிக்கு வந்ததும் மாவினுடைய விலையைக் குறைத்ததும் தோட்டத் தொழிலாளர்கள் சந்தோசம் அடைந்தனர். இந்த விலை குறைப்பு இவ்வளவிற்கு ஏற்றமான நிலைக்குக் கொண்டு செல்லும் என்று தொழிலாளர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இன்றோ தோட்டத் தொழிலாளர் நிலை மிக மிக மோசமாகியுள்ளது. மாவின் விலை அதிகரிப்பால் அரிசி விலையும் தாறுமாறாக ஏறியுள்ளது. விலையேற்றம் ஒருபுறம் மறுபுறம் மாவில் கலப்படம் தாராளமாகச் செய்யப்படுகிறது. களஞ்சியங்களில் இருந்து கழிக்கப்பட்ட மா மலையகத்திற்கு திட்டமிட்டே அனுப்பப் படுகின்றது. ஏற்கனவே உள்ள விலை உயர்வால் அவதியுறும் தோட்டத் தொழிலாளர்கள் மாவின் விலையேற்றத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். சம்பள உயர்வு என்ற பேச்சையே காணவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமடைந்துள்ள இந்த வேளை, அவர்களின் பெயரால் பெரும் தலைவராக வந்த தொண்டமானோ அரசாங்கத்தில் மந்திரிப் பதவி பெறப் போகிறார் என்று பேசப்படுகிறது. தொண்டமான் மந்திரியோ அல்லது பிரதமரோ ஆகலாம். ஏனெனில் அவரது வர்க்க சேவை யு. என். பி.க்கு என்றும் இருந்து வந்துள்ளது. நன்றிக்கடனை மறவாத யு. என். பி. தொண்டமானை மந்திரி ஆக்கும் அதே வேளை தோட்டத் தொழிலாளர்களை பட்டினியில் சாகடிக்க முற்படுகின்றது. விலைவாசி உயர்வுக்கும், சம்பள உயர்வு இல்லாமைக்கும் எதிராக, எதிர்ப்பு நடவடிக்கைகளில் தோட்டத் தொழிலாளர்கள் இறங்குவதிலிருந்து அவர்களை திசைதிருப்பவும், அமுக்கவும் நாட்டின் ஏனைய தொழிலாளர்கள் விவசாயிகளுடன் இணைந்து போராடுவதைத் தடுக்கவும் தான் தொண்டமான் மந்திரியாக்கப் படுகிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தொண்டமான் அன்றும் இன்றும் தோட்டத் தொழிலாளர்களின் தலைவர் என்ற போர்வையில் தனது சேவையை தனது வர்க்கக் கட்சியான யு. என். பி.க்கே செய்து வருகிறார். ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் மென்மேலும் பட்டினி வாழ்வையே அனுபவிக்கின்றனர். இந்நிலை நீண்டகாலம் நீடிக்காது. ஏனெனில் தோட்டத் தொழிலாளர்கள் உண்மை நிலை அறியும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

# பாட்டாளி

புரட்சிகர வெகுஜன ஏடு

## தீண்டாமை ஒழிப்பும் தமிழர் கூட்டணியும்

தீண்டாமை ஒழிய வேண்டும். சாதிமுறை இல்லாது போகவேண்டும். இவை தமிழ் இனத்தின் மத்தியில் புரையோடி விட்ட புண்ணாகிவிட்டது. இந்தப் புண் அகற்றப்படாத வரை தமிழினம் விடுதலை பெறவே முடியாது. இவ்வாறு ஓரிரு வாரங்களாகத் தமிழர் கூட்டணியின் தலைமைப் பீடத்தினரால் கூறப்பட்டு வருகின்றது.

தீண்டாமையும், சாதிமுறையும் ஒழிய வேண்டும். நிச்சயம் ஒழிக்கப்படல் வேண்டும். அதற்கான இயக்கங்கள் கடந்த காலத்தில் நடத்தப்பட்டன. சில இயக்கங்கள் தோல்வி அடைந்தன. சில வெற்றி பெற்றன. அந்த வெற்றி தோல்விகளின் அனுபவங்கள் தரும் பாடங்கள் மிகவும் உன்னிப்பாகவும் நிதானமாகவும் அணுகப்படல் வேண்டும். அப்பொழுது தான் தீண்டாமை, சாதி தரும் கொடுமைகளை முற்றாக ஒழிக்கும் மார்க்கம் வெற்றி பெற முடியும்.

தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று கூறும் தமிழர் கூட்டணித் தலைமைப் பீடத்தினர் காலத்திற்குக் காலம் தீண்டாமை ஒழிப்பைப் பற்றிப் பேசி வந்துள்ளனர். 1956ம் ஆண்டு தமிழரசுக் கட்சியினரே சமூகக் குறைபாட்டு ஒழிப்புச் சட்டத்தை கொண்டுவரக் காரணமாக இருந்ததாகப் பிரசாரம் செய்து அதன்மூலம் சாதி ஒழிந்துவிடும் என்றனர். பின்பு 1961ல் சத்தியாக்கிரகம் வடக்குக் கிழக்கில் நடத்திய போது சாதி ஒழிந்துவிட்டது, தமிழினம் ஒன்றுபட்டு விட்டது என்று சொன்னார்கள். அதன் பின் பாத யாத்திரை செய்து சமபந்தி போசனம் நடாத்தி சாதி ஒழிந்து விட்டதாகக் கூறினர். காந்தி பிறந்த நாளிலும் இறந்த நாளிலும் தீண்டாமையைப் பற்றிப் பேசப்பட்டு வந்தது. கடந்த தேர்தலில் தீண்டாமை - சாதி பற்றியெல்லாம் பெரிதாகப் பேசப்பட்டது. உடுப்பிட்டியில் ஒரு ஒடுக்கப்பட்டவர் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் சாதியும் தீண்டாமையும் ஒழிந்துவிடும் என்றும் கூறப்பட்டது. ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து ஒருவர் உடுப்பிட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் தீண்டாமையும் சாதிமுறையும் ஒழிந்து போகவில்லை. இப்பொழுது கூறுகிறார்கள் அக்டோபர் இரண்டாம் திகதியுடன் சாதி ஒழியப் போகின்றதாம். எப்படி ஒழியப் போகின்றது என்றே மக்கள் கேட்கின்றனர். தீண்டாமையை ஒழிக்க முன்வந்துள்ள தமிழர் கூட்டணியினர் உண்மையாகவும், நேர்மையாகவும் தீண்டாமையை ஒழிக்க விரும்புகிறார்களா? அல்லது தனித் தமிழ் நாடு கோரிக்கையில் இருந்து இளைஞர்களைத் திசை திருப்புவதற்கான ஒரு முயற்சியாக இப்பிரசாரத்தை மேற்கொண்டுள்ளனரா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தீண்டாமையையும் சாதி முறையையும் தமிழர் கூட்டணியினர் கூறும் வழிகளில் ஒழிக்க முடியாது. அவர்களது தத்துவமான காந்தீயம் சாதிமுறையை ஒழிக்கவில்லை. ''காந்தி மகான்'' இந்தியாவில் தீண்டாமையை ஒழித்து விட்டார் என்று கூறுபவர்கள் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் தீண்டாமையும் சாதிவெறியும் எவ்வளவு உச்சக்கட்டத்தில் இருக்கின்றது என்பதற்கு கடந்த மாதம் தமிழ் நாட்டின் விழுப்புரத்தின் சம்பவங்களும், வடநாட்டின் மாகாணங்களில் நடைபெற்ற சாதிவெறிச் சம்பவங்களும் சாட்சியம் கூறும். இன்று இந்தியாவில் எட்டுக் கோடி மக்கள் தீண்டாமையாலும் சாதியினாலும் ஒடுக்கப்பட்ட மக்களாக உள்ளனர். அவர்களின் பெயரால் எம்.பி.யானவர்கள், மத்திய மந்திரிகளானவர்கள், ஏனைய உயர் பதவிகளைத் தேடிக் கொண்டவர்கள் அநேகம் பேர் என்பது உண்மைதான். அதனால் இந்தியாவில் தீண்டாமையோ சாதிமுறையோ ஒழிந்துவிடவில்லை. இங்கும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் காந்தியையும், இந்தியாவையும் உதாரணம் காட்டி தீண்டாமையையும், சாதியையும் ஒழிக்க முற்பட்டுள்ளது வெறும் ஏமாற்றும், கண்துடைப்புமாகவே உள்ளது.

தீண்டாமையையும், சாதிமுறையையும் ஒழிப்பதற்கு தமிழ்த் தலைவர்களினதும், காந்தியத்தினதும் போலித் தன்மைகளால் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே ஒடுக்கப்பட்ட மக்கள் தமது சொந்தப் போராட்டங்களை முன்னெடுப்பது என்ற முடிவுக்கு வந்தனர். அந்த முடிவின் வெளிப்பாடே 1966ம் ஆண்டு இக்டோபர் 21 எழுச்சியாகும். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட தீண்டாமைக்கும், சாதி வெறிக்கும் எதிரான போராட்டம் வடபகுதி எங்கும் பற்றிப் பரவி, பரந்த வெகுஜனப் போராட்டத் தீச்சுவாலையாக மாறியதை நாடே நன்கறியும்.

தீண்டாமைக்கும், சாதி வெறிக்கும் எதிராக வெடித்துக் கிளம்பிய புரட்சிகர வெகுஜன இயக்கத்தால் சாதிவெறியர்கள், தீண்டாமையின் நாயகர்கள், அவர்களின் அரசியல் பிரதிநிதிகள் எல்லோரும் நடுநடுங்கினர். ஒடுக்கப்பட்ட மக்களின் பேரெழுச்சியின் முன் வரவே அஞ்சி ஓடினர். ஒடுக்கப்பட்ட மக்கள் இரத்தம் சிந்தினர். உயிர்களை ஈய்ந்தனர். அடிமை வாழ்வை அகற்ற களம் பல கண்டனர். சங்கானையில், மட்டுவிலில் அச்சுவேலியில், கரவெட்டி-கன்பொல்லையில், கொடிகாமம் மந்துவிலில் வெடித்துக் கிளம்பிய வெகுஜன தீச் சுவாலைகளால் சாதி வெறிக் கூட்டம் சுற்றிவளைக்கப்பட்டன. அப்பொழுது தான் வடபகுதியின் தேனீர்க் கடைகள், பிரபல்யமான ஆலயங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் சமத்துவம் பெறப்பட்டது. தீண்டாமைக்கும் சாதிவெறிக்கும் எதிரான போராட்டங்கள் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் இதுவரை பெற்றிராத வெற்றிகளையும், சமத்துவத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பெற்றுக் கொடுத்தன. இதுவரை ஒடுங்கி வாழ்ந்த மக்கள் தலைநிமிர்ந்து வாழ முற்பட்டனர். இது ஒடுக்கப்பட்ட மக்கள், தமிழ்த் தலைவர்களையும் அவர்களது மார்க்கத்தையும் நிராகரித்து புரட்சிகரமான வெகுஜனப் போராட்டப் பாதையில் துணிந்து முன்னேறியதன் விளைவே அன்றி வேறு எதுவுமாக இருக்க முடியாது.

தீண்டாமையையும் சாதியையும் ஒழிக்க உண்மையில் யாராவது மனப்பூர்வமாக விரும்பினால், அது தமிழர் கூட்டணியின் தலைமைப்பீடம் காட்டும் கண்துடைப்பு மார்க்கத்தால் முடியாது என்பதை நன்கு உணர்ந்து கொள்ளல் வேண்டும். அதற்குப் பதிலாகக் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் ஒடுக்கப்பட்ட மக்கள் தாம் நடாத்திய வெகுஜனப் போராட்டங்களின் அனுபவங்கள் தரும் உண்மைகளின் அடிப்படையில், தீண்டாமைக்கு எதிராகப் போராடுவதே சரியான மார்க்கமாகும்.

## இரத்தினபுரியில் சண்முகதாசனை நோக்கி கேள்விக் கணைகள்

சில வாரங்களுக்கு முன்னர் மூன்று உலகக் கோட்பாட்டிற்கு விரோதமாக சீன எதிர்ப்பு வாந்தி எடுக்கும் பொருட்டு சண்முகதாசன் இரத்தினபுரிக்குச் சென்றிருந்தார். இரத்தினபுரிப் பிரதேசத்திலுள்ள 82 கட்சி அங்கத்தவர்களுக்கு கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடப்பட்டும், சண்முகதாசன் உட்பட 27 பேர் மட்டுமே கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர்.

எதிர்பார்த்த தொகையினர் கூட்டத்திற்கு வராமையால் மனமுடைந்த நிலையில், வழமை போன்று சீன எதிர்ப்பு வாந்தியை சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பாஷையில் சண்முகதாசன் பேச முற்பட்ட சமயம், சமூகமளித்திருந்தவர்கள் சரமாரியான கேள்விக் கணைகளை நாலா பக்கமிருந்தும் சண்முகதாசனை நோக்கி தொடுத்தனர். இதனால் சண்முகதாசன் திக்குமுக்காடிக் கொண்டிருந்த சமயம் பதுளைக் கிளையைக் கலைத்து, தோழர் குணசேகராவை கட்சியிலிருந்து நீக்கியமைக்கான காரணத்தைக் கேட்டும், கேள்விக்கணை தொடுக்கப்பட்டது. இவைகளுக்கு தாக்குப் பிடிக்க முடியாத சண்முகதாசன் இடைநடுவில் கூட்டத்தை முடித்துக் கொண்டு, அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட புதிய 7 ஸ்ரீயைக் கொண்ட விசாலமான 'குளு குளு' காரில் இரத்தினபுரியை விட்டு சென்று விட்டார். அவரது சகபாடிகளோ செய்வதறியாது திகைத்துநின்றனர்.

## இது உண்மையா?

தமிழர் கூட்டணி தீண்டாமையை ஒழிப்பதற்கு ஒரு குழுவை நியமித்துள்ளது. அக்குழுவிற்கு பிரபலமான கூட்டணித் தலைவர்களில் ஒருவர் தலைவராகவும் இருந்து வருகிறார். அதே தீண்டாமைஒழிப்பு குழுத் தலைவரின் சொந்த வீட்டிலே தீண்டாமையாலும், சாதி முறையினாலும் ஒதுக்கல்களும் பாகுபாடும் காட்டப்படுவதாக அத்தொகுதி மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பேசிக் கொள்கின்றனர். அண்மையில் கூட அவ்வீட்டிற்கு மாங்காய் பிடுங்கச் சென்ற சிலருக்கு போத்தல்களில் தண்ணீர்வழங்கப்பட்டதாம். அவர்கள் உயர் சமூகத்தினராக இருந்தும் மரத்தில் ஏறியதாலோ என்னவோ போத்தல்களில் தண்ணீர் கிடைத்ததாம். இவ்வாறு தொடர்ச்சியாக அவ்வீட்டில் சாதியும் தீண்டாமையும் மிக ஒழுங்காக கடைப்பிடிக்கப்படுவது எதுவும் அதிசயம் இல்லை என்றும் அப்பகுதி மக்கள் பேசிக் கொள்கின்றனர். இது உண்மையா?

### சீன சஞ்சிகைகளுக்கு வசந்தம் புத்தக நிலையத்தில் சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்

மாக்சிச - லெனினிச - மாசேதுங் சிந்தனை நூல்கள், சீன பிரசுரங்கள், வெளியீடுகள், படங்கள், அக்குபஞ்சர் வைத்தியம் பற்றிய நூல்கள் - படங்கள், சிறுவர் புத்தகங்கள் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

வசந்தம் புத்தக நிலையம்
45, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

## வெகுஜனங்களின் தேவையிலிருந்தே வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்!

# தமிழ் மக்களும்-இன வாதமும்

தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மிகவும் சாதாரணமானவை என்று யாரும் தட்டிக்கழித்து விட முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும் என்று வாய் வீட்டுக்கூறுத அரசியல் கட்சிகள் எமது நாட்டில் எதுவும் இல்லை. அந்தளவிற்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் முக்கியத்துவம் அடைந்துள்ளன. இன, மொழி, பிரதேச, கலாச்சார அம்சங்களில் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் மீது திட்டமிட்ட கஷ்டங்களை உச்சரித்துக் கொள்வார்களே தவிர அடிப்படையான நோக்கம் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் சொத்துடைய வர்க்கத்தின் வளர்ச்சிக்கும் அவர்களது பாதுகாப்பிற்கும் விசுவாசமாக உழைப்பதேயாகும்.

இவ்விதமான சொத்துடைய வர்க்கப் பிரதிநிதிகளின் ஆட்சி நடைமுறையின் கீழ் சாதாரண உழைக்கும் மக்கள் மோசமான பொருளாதார நெருக்கடிகளையும் அவலமான வாழ்க்கை நிலைமைகளையும் எதிர்நோக்கி, ஆளும் வர்க்கத்திற்கு எதிராக தமது எதிர்ப்பைத் தெரிவித்து போராட்ட நிலைமைகளுக்கு முன்தள்ளப்படும் நிலை உருவாகும் வேளைகளில் இனவாதம் என்ற பகடைக்காய் இலங்கை மக்களின் முன்னால் உருட்டப்படும். எப்பொழுதும் ஆளும் வர்க்கத்தினராக இருப்போர் பெரும்பான்மை இனமான சிங்கள இனத்தின் மத்தியில் இருந்து வந்தவர்களாகவே இருப்பர். அவர்களோடு காலத்திற்குக் காலம் தமிழ் இனத்தின் ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளும் கூட இருந்தே தீருவார்கள். பொருளாதார நெருக்கடிகளையும் - வேலை இல்லாத் திண்டாட்டத்தையும். மக்களின் ஏனைய அபிலாஷைகளையும் தீர்க்க முடியாது. ஆளும் வர்க்கத்தினர் இன ரீதியில் தமிழ் மக்களை நசுக்கும் நடவடிக்கைகளை எடுத்து சிங்கள மக்கள் மத்தியில் தற்காலிகமாக ஆறுதல் பெற்றுக் கொள்ள முயலுவார்கள். தமிழ் மக்களுடைய உரிமைகளையும், அவர்கள் அனுபவித்து வந்த சலுகைகளையும் பறித்து சிங்கள மக்களுக்குத் தந்துள்ளோம் என்ற ஒரு மயக்கத்தை ஏற்படுத்த முற்படுவார்கள்.

சிங்கள ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளால் தமிழ் மக்களுக்கு

## சிங்கள-தமிழ் ஆளும் வர்க்கம் முறியடிக்கப்பட்டாலே தமிழ் மக்கள் விடுதலை பெறுவர்!

பல தாக்குதல்களை தொடுத்து வந்துள்ளன. எமது நாடு அந்நியரின் ஆட்சிக் காலத்தில் தனது தன்னிறைவுப் பொருளாதாரத்தை இழந்து அந்நிய நாட்டை நம்பி வாழும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டது. சுதந்திரம் என்ற சுலோகம் எமக்குக் கிடைத்த பின்பும் எமது நாட்டின் சொந்தப் பொருளாதாரத்தில் தங்கிநிற்கும் நிலை இன்று வரை மீட்கப்படவில்லை. இந்நிலையின் நீடிப்பால் நாட்டு மக்களின் உணவு, உடை, இருப்பிடம், அல்லது இவற்றைப் பெறுவதற்கான சகல மக்களுக்கும் வேலை வாய்ப்பு என்பன கிடைக்கவில்லை. எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க முடியாது, வேலையின்மையைப் போக்க முடியாது. மக்களுக்குச் சிறந்த வாழ்க்கையைக் கொடுக்க முடியாது திண்டாடுவதையும், மக்களை ஏமாற்றுவதையுமே நாம் காண முடிகின்றது. இவ்வாறு பொருளாதார நெருக்கடிகளை அத்தகைய கட்சிகளினால் தீர்க்க முடியாமைக்கான அடிப்படைக் காரணம் அக்கட்சிகள் எமது நாட்டு ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் அபிலாஷைகளை தமது குறிக்கோள்களாகக் கொண்டிராமையேயாகும். அவர்கள் பெயரளவில் அல்லது பதவிக்கு வரும் நோக்குடன் மக்களின்

### தொண்டமான் துரோகியா? தியாகியா?

அண்மையில் யூ. என். பி. யால் நிறைவேற்றப்பட்ட புதிய அரசியல் சாசனத்தை தொண்டமான் போற்றிப் புகழ்ந்து வரவேற்று ஆதரவு கொடுத்தார். தமிழர் கூட்டணி தாம் அரசியல் சாசனத்திற்கு எதிர்ப்பு என்று கூறியது. கடந்த கூட்டணி மாநாடு வரை தொண்டமான் தமிழர் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். இன்று யூ. என். பி. யின் அரசியல் சாசனத்திற்கு தனது பூரண ஆதரவையும் கொடுத்துள்ளார். இப்படியாயின் தொண்டமானைப் பற்றி தமிழர் கூட்டணி என்ன கணிப்பைக் கொண்டுள்ளது? தொண்டமானைத் துரோகி என்பதா? அல்லது தியாகி என்பதா? என்று தமிழ் இளைஞர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இப்படி இளைஞர்கள் கேள்வி எழுப்புவதற்கு நியாயமும் உண்டு. கடந்த அரசாங்கம் கொண்டு வந்த அரசியல் சாசனதனையும் கூட்டணி எதிர்த்தது. அந்த அரசியல் சாசனம் தமிழ் மக்களுக்கு எவ்வித விமோசனமும் காட்டவில்லை என்று கூறி அரசியல் சாசனத்தை எரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இன்றைய யூ. என். பி. யின் அரசியல் சாசனமும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கவில்லை என்று கூட்டணியினர் அதை எதிர்த்துள்ளனர். ஆனால் அதை எரித்து எதிர்ப்பு இயக்கம் நடத்தவில்லை. காரண யூ. என். பி. அரசோச்சுவதனால் போலும்.

தாம் எரித்த அரசியல் சாசனத்துக்கு அன்று ஆதரவு கொடுத்த தமிழர் சிலரை ''தமிழ்த் துரோகிகள்'' என்று பட்டயம் சூட்டி, இளைஞர்களை அவர்களுக்கு எதிராகக் கிளப்பி விட்டவர்கள் கூட்டணித் தலைவர்கள். அதே தலைவர்கள் இன்று தொண்டமான் அரசியல் சாசனத்திற்கு ஆதரவு கொடுத்த போது மௌனமாக உள்ளனர், காரணம் என்ன என்பதே இளைஞர்களின் கேள்வியாகும்.

இழைக்கப்படும் அநீதிகளுக்குப் பின்னால் உள்ள உண்மையான பொருளாதாரக் காரணங்களை பற்றி சரியான ஒரு நிலையை சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறி, இன்றைய பொருளாதார அமைப்பை அடிப்படையில் மாற்றி அமைக்கப் போராடும் பாதையில் இடதுசாரிக் கட்சிகள் தவறிவிட்டன. அவ்வாறு அவர்கள் தவறி நடப்பதற்கு காரணமாக இருந்து வந்தது பாராளுமன்ற சந்தர்ப்ப வாதமே அன்றி வேறு எதுவுமில்லை. பாராளுமன்ற ஆசனங்களுக்கு வாக்குச் சேகரிக்கும் பாதையில் தேவை ஏற்பட்ட நேரங்களில் இதே இடதுசாரிகள் இனவாதத்தைப் பேசுவதற்கு எவ்வித கூச்சமும் கொள்ளவில்லை. இதனால் சிங்கள மக்களுக்கு இனவாதத்தின் தோற்றமோ, வளர்ச்சியோ, அதன் கேவலமான தன்மையோ எத்தகையது என்பதை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு மறைக்கப்பட்டது. இனவாதம் வர்க்கப் போராட்ட வளர்ச்சிக்கு எவ்வளவு குந்தகமானது என்பதும் சிங்கள உழைக்கும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லப்படவில்லை. இதனால் இனவாதம் ஆளும் வர்க்கத்தின் மூலம் வளர்க்கப் படுவதற்கும் அதன் கோரத்தனங்கள் வர்க்க ரீதி

7-ம் பக்கம் பார்க்க

### விடுதலை வீரர்களா? உழவு இயந்திர வியாபாரிகளா?

அரசாங்கம் பதவிக்கு வந்ததும் வராததுமாக விவசாயிகளுக்கு நாலு சில்லு உளவு யந்திரங்களை (ராக்டர்களை) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்தது. இதற்கு முதற்படியாக தன்வசமிருந்த உழவு இயந்திரங்களைத் தொகுதி ரீதியாகப் பிரித்து வழங்க ஏற்பாடு செய்தது. விவசாய நடவடிக்கை அதிகம் உள்ள தொகுதிகளுக்கு சலுகை காண்பிக்கப்பட்ட அதே வேளை ஏனைய தொகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்தது.

இந்த உழவு யந்திரங்களைப் பெறுவதில் வடபகுதி விவசாயிகள் அக்கறை காட்டினர். ஆனால் அவர்கள் ஏககாலத்தில் ''விவசாயிகளா''கவும், வியாபாரிகளாகவும் தமிழ் முதலாளிகளானவர்களுடன் போட்டியிட்டனர். அந்தப் போட்டியில் ''இன உறவு'' வெற்றி பெறவில்லை. வர்க்க உறவு தான் வெற்றி பெற்றது என்பதைச் சகல விவசாயிகளும தம் கண்முன்னாலேயே கண்டு கொண்டனர்.

இந்த உழவு யந்திரத்தை வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னைய கால விலைக்குப் பெற்ற ''விடுதலை வீரர்கள்'' பின்னர் அவற்றைத் தமிழ் மக்களுக்குப் பல பத்தாயிரம் ரூபாய் இலாபத்தில் விற்றனர். இது பகிரங்க இரகசியம். இந்த வியாபாரம் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கோப்பாய், கிளிநொச்சி ஆகிய தொகுதிகளில் இடம்பெற்றதாக நாம் அறிகிறோம். இந்த வியாபாரத்தில் பெரும் லாபம் பெற்றவர்கள் அத்தொகுதிகளின் ''விடுதலை வீரர்கள்'' தான் என்பதும், உழவு யந்திரங்களைப் பெற்றவர்கள் கொழுத்த தமிழ் முதலாளிகள் என்பதும் சகலரும் அறிந்த உண்மையாகும்.

இந்த உழவு யந்திரங்களை பழைய விலையிலேயே பெற்றுக்கொண்ட ''தமிழ் முதலாளிகளிடம் ஏற்கனவே ஒன்றுக்கு மேற்பட்ட ட்ராக்டர்களும் வேறு விவசாய உபகரணங்களும் உள்ளன. ஒரு ''விடுதலை வீரர்'' தனது தனது பெயரிலும், மனைவி பெயரிலும் பெற்றுக் கொண்டாராம்.

இங்கு முதலாளிகள் என்று குறிப்பிடப்பட்டவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். இவர்களெல்லாம் பீடி முதலாளி, விசுக்கோத்து முதலாளி போன்ற பெரும் முதலாளிகள்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

உறவு என்பது எப்போதும் வர்க்க உறவாகத்தான் இருக்க முடியும்.

# தமிழர் கூட்டணியின் முடிவுகளும் விளைவுகளும்

தமிழர் கூட்டணியின் 2-வது தேசிய மாநாடு ஆவரங்காலில் அவ்வளவு ஆரவாரம் இன்றி நடந்து முடிந்தது. எப்படி மாநாட்டை சமாளித்து பட்டும் படாததுமான தீர்மானங்களை எடுப்பது என்பதில் கூட்டணித் தலைமைப் பீடம் மண்டையைப் போட்டுடைத்து ஒருவாறாக, கூட்டணித் தலைமைக்கெதிரான இளைஞர்களின் பலத்த கண்டனங்கள்,

## ''எல்லையை பாதுகாக்கும்'' கோஷத்தால் சிங்களக்குடியேற்றம் வலுவடைகிறது

ஆர்ப்பாட்டங்கள், குழப்பங்களுக்கு மத்தியில் மாநாட்டை ''வெற்றிகரமாக'' முடித்துக் கொண்டது.

தேர்தல் முடிந்ததும் தமிழ்த்தேசிய மன்றம் அமைப்போம் என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அமுல் நடத்து என்ற கோஷம் இளைஞர்கள் மத்தியில் ஓங்கி நின்றது. தாங்கள் வளர்த்த சவறான கொள்கைகளே தமக்கு எதிராக எழுந்து நின்றதைக் கண்டு விறைத்த தலைவர்கள் ''காலம் வரும்'' போது அமைப்போம். அதற்கான சூழ்நிலை இன்று இல்லை என்று பயபீதியுடன் மழுப்பிய காட்சி பரிதாபத்துக்குரியதாக இருந்தது. இந்த அபாய கட்டத்திலிருந்து தப்புவதற்கு இளைஞர்களின் மீது பழிபோடும் தீர்மானம் ஒன்று முழக்கமிடப்பட்டது. அது என்னவெனில் தமிழ்த் தேசிய மன்றம் அமைப்பதற்கு முன் எமது மண்ணைப் பாதுகாக்க வேண்டும். அதாவது ''எல்லைப் புறங்களில்'' இளைஞர்கள் குடியேறி நமது பிரதேசத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என்பதாகும். இந்த எல்லைப்புற குடியேற்றங்கள் பற்றி மாநாட்டில் பேசப்பட்டவற்றை பத்திரிகைகள் பெருமுக்கியத்துவம் கொடுத்து மாநாட்டின் முக்கிய தீர்மானங்களில் ஒன்றாக வர்ணித்தன. ஆனால் இத்தீர்மானத்தின் விளைவுகள் எப்படியிருக்கும் என்பதையோ, இது சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் எவ்வாறு அர்த்தப் படுத்தப்படும் என்பதையோ அல்லது சிங்கள இனவெறி சக்திகள் இக்கோஷத்தைப் பயன்படுத்தி எவ்வாறு இனவாதத்தைப் பரப்புவார்கள் என்பதையோ கூட்டணியின் தலைவர்களால் உணர முடியவில்லை. இத்தகைய தீர்மானங்களை வெறும் முழக்கங்களாக கூட்டணித் தலைவர்கள் வைத்திருக்க கிழக்கு மாகாணத்திலும், வடபகுதியின் வவுனியாப் பகுதிகளிலும் வேகமாக அரசின் அனுசரணையுடன் சிங்களக் குடியேற்றங்கள் நடை

(6-ம் பக்கம் பார்க்க)

**இனவாதக் கோஷங்களை நிராகரித்து வர்க்க அடிப்படையில் முன்னேறுவோம்!**

# மூன்று உலகக் கோட்பாடு

# தலைவர் மாஓ வினால் முன்வைக்கப்பட்டதா?

## தோழர் வாங் பிங்-நாம் அவர்களுடன் ஒரு பேட்டி

**கேள்வி:**

மூன்று உலகக் கோட்பாட்டை மாஓ முன்வைத்ததாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக அவர் கையெழுத்துடன் கூடிய ஆதாரம் உண்டா?

**பதில்:**

'மூன்று உலகங்கள்' பற்றிய விஞ்ஞான பூர்வமான முடிவைத் தலைவர் மாஓ முதல் முதலாக ஜனாதிபதி கவுண்டாவிற்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார். அந்தக் கூற்று வெறுமனே மேலெழுந்த வாரியாகத் தெரிவிக்கப்படவில்லை. அது நீண்டகால அவதானிப்பின் பின்னரும் உலக நிலைமையை ஆராய்ந்த பின்னருமே தெரிவிக்கப்பட்டது.

தலைவர் மாஓ வின் இந்தக் கருத்து முற்று முழுதாக அவருடையதல்ல. முதலாவது உலக யுத்தத்தின் பின் தோழர் லெனின், உலகை மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கும் கருத்தை முன்வைத்தார். அப்போது உலக சனத்தொகை 175 கோடியாகவிருந்தது. மூன்று பகுதிகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டது:

(1) காலனி, அரைக் காலனி, அடக்கப்பட்ட நாடுகள் உட்பட முதலாவது உலக யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட நாடுகள். உலக சனத்தொகையில் பெரும் தொகையினரைக் கொண்ட இப்பகுதியின் சனத்தொகை 125 கோடியாகும்

(2) முதலாவது உலக யுத்தத்தின் பின் முன்னைய நிலையில் இருந்த நாடுகளின் சனத் தொகை 25 கோடி.

(3) யுத்தத்தில் வெற்றியீட்டிய வல்லரசு நாடுகளின் சனத்தொகை 25 கோடி.

முதலாவது உலக யுத்தத்தின் பின்பு இருந்த சனத்தொகையிலும் பார்க்க மிகக் கூடுதலான சனத்தொகையை மூன்றாவது உலகம் இன்று கொண்டுள்ளது. இன்று உலக சனத்தொகை சுமார் 400 கோடியாகும் ஆசியாவின் சனத்தொகை 220 கோடி, ஆபிரிக்காவின் சனத்தொகை 40 கோடி, லத்தின் அமெரிக்காவின் சனத்தொகை 30 கோடி. எனவே மூன்றாவது உலகின் சனத்தொகை 290 கோடி. இரண்டு மேலாதிக்க வல்லரசுகளையும் எதிர்ப்பதற்கு ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தி அந்த இரு மேலாதிக்க வல்லரசுகளையும் தனிமைப்படுத்த வேண்டுமென்பதே மாஓ வின் கருத்து. அநேக நண்பர்கள் குறைந்த எண்ணிக்கையில் எதிரிகள் இருப்பது மிகவும் நல்லதென்பதே மாஓ வின் அபிப்பிராயமாக இருந்து வந்தது.

1974 ம் ஆண்டு ஐ. நா. வின் 6 வது விசேட கூட்டத்தில் தெங் ஷியாவோ பிங் மூன்று உலகங்கள் பற்றி ஒரு முழுமையான, ஒழுங்குபடுத்தப்பட்ட சொற்பொழிவை நிகழ்த்தினார். அவர் ஐக்கியநாடுகள் சபையில் சொற்பொழிவாற்றுவதற்கு முன் அவரது சொற்பொழிவின் எழுத்துப் பிரதியை தலைவர்மாஓ பரிசீலித்து, திருத்தம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மூன்று உலகங்கள் பற்றிய கருத்து தலைவர் மாஓ வினால் முன்வைக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

**கேள்வி**

இரு மேலாதிக்க வல்லரசுகளும் உலக மக்களின் பிரதான எதிரி என்றால், ஒன்றிற்கு எதிராக மற்றதுடன் ஐக்கியப்படுவது சரியா?

**பதில்**

எமது அணுகுமுறை பின்வருமாறு: நாம் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளையும் எதிர்க்கும் ஒரு பொதுக் கொள்கையைக் கொண்டுள்ளோம். அவை இரண்டும் உலக மக்களின் எதிரிகளாகும். சோவியத் ரஷ்யாவை எதிர்ப்பதற்கு அமெரிக்காவுடன் ஐக்கியப்படல் வேண்டுமென்ற கருத்தை நாம் முன் வைத்தது கிடையாது. நாம் கூறுவதெல்லாம் அவை இரண்டுக்குமிடையே உள்ள முரண்பாட்டை எமக்குச் சாதமாக உபயோகிப்பது என்பது தான். சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதையே நாம் அழுத்தம் கொடுக்கின்றோம். அதற்காக அமெரிக்காவுடன் ஐக்கியப்படுவதென்பது அர்த்தமல்ல.

**கேள்வி**

ரஷ்யாவை ஆதரிப்பவர்களை எதிர்ப்பதும், ரஷ்யாவை எதிர்ப்பவர்களை ஆதரிப்பதும் சீனாவின் கொள்கையாக இருந்து வருகின்றது என்பது உண்மையா?

**பதில்**

உண்மை நிலைக்கு ஏற்றதாக இந்தக் கூற்று அமையவில்லை என்றே நாம் நினைக்கின்றோம். நாம் எதையும் வரையறையில்லாது ஆதரிப்பதோ, எதிர்ப்பதோ இல்லை. ரஷ்யாவை எதிர்ப்பவர்கள் எல்லோருடனும் நாம் சிநேகம் கொள்ளவில்லை. இஸ்ரேலை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். ஐ. நா. அங்கத்துவ நாடுகளில் சீனாவை அங்கீகரித்த முதல் நாடுகளில் இஸ்ரவேலும் ஒன்று. ஆனால் அமெரிக்க ஆதரவுடன் இஸ்ரவேல் விஸ்தரிப்பு ஆக்கிரமிப்புக் கொள்கையை கடைப்பிடித்து வந்துள்ளது. நாம் பாலஸ்தீனியர்களையும் அராபியர்களையும் ஆதரிக்கின்றோம். எனவே இஸ்ரவேலுடன் ராஜியத் தொடர்புகளை ஏற்படுத்தவோ அல்லது வேறு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவோ நாம் உறுதியாக மறுத்து வந்துள்ளோம். (நாம் இஸ்ரேலிய மக்களை எதிர்க்கவில்லை. ஆனால் அவர்களின் அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையையே எதிர்க்கின்றோம்.) தெற்கு ஆபிரிக்கா மற்றுமொரு உதாரணம். சிமித், வோஸ்டர் நிர்வாகங்கள் தாம் சோவியத் யூனியனை எதிர்ப்பதாகவும் சீனாவின் பக்கத்தில் சில விளக்கத்தை பெறவிரும்புவதாகவும் கேட்டிருந்தன. ஆனால் நாம் ஆசானியா, ஷிம்பாவே, நமீபியா மக்களின் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்கின்றோம். சிமித், வோஸ்டர் தலைமையிலான வெள்ளை நிர்வாகங்களை திட்டவட்டமாக எதிர்க்கின்றோம். நாம் அவற்றுடன் எந்தவித தொடர்பையும் கொண்டிருக்கவில்லை.

**கேள்வி:**

சீனா ஏன் நேட்டோவை ஆதரிக்கின்றது?

**பதில்:**

கொள்கை நிலைப்பாடும் உண்மை நிலையும் இருக்கின்றது. கொள்கையளவில் நாம் வார்சோ உடன்படிக்கையையும், நேட்டோவையும் எதிர்க்கின்றோம். இந்த அமைப்புகளைக் கலைத்துவிட வேண்டுமென நாம் திட்டவட்டமாகக் கோருகின்றோம்.

> சீன - ஆங்கில நட்புறவுச் சங்கத்தின் தூது கோஷ்டி ஒன்று சில மாதங்களுக்கு முன்பு சீனாவிற்கு விஜயம் செய்தது. இத் தூது கோஷ்டி வெளிநாடுகளுக்கான சீன மக்கள் நட்புறவுக் கழகத்தின் தலைவர் தோழர் வாங் பிங்-நாம் அவர்களை பீக்கிங்கில் பேட்டி கண்டது. இப்பேட்டியின் போது மேற்படி தூது கோஷ்டியினரால் முன்வைக்கப்பட்ட சீனா பற்றிய பல கேள்விகளுக்கு தோழர் வாங் பிங்-நாம் விரிவான விளக்கங்களை கொடுத்தார். அப்பேட்டியை அப்படியே இங்கு தருகின்றோம் (ஆ. குழு)

இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் ஆயுதங்களைக் குறைக்கவேண்டுமெனப் பெரும் ஆரவாரம் செய்கின்றன. நாம் ஒருதலைப்பட்சமான ஆயுதப் பரிகரணத்தையும், நேட்டோவைக் கலைக்குமாறு கோரமுடியாது. மேலாதிக்க வல்லரசுகளின் போட்டா போட்டியின் மையம் ஐரோப்பா. உலக மேலாதிக்கத்தின் திறவுகோல் ஐரோப்பா. இரண்டில் ஒரு சாரார் ஆபிரிக்காவையோ அல்லது சீனாவையோ மட்டும் இடம் கொண்டால் அவர்கள் தமது இலட்சியத்தை அடைய முடியாது. சீனா ஐரோப்பாவின் எந்த ஒரு தனிநாட்டுடனும் ஐக்கியப்பட முடியாது. ஆனால் ஒரு ஐக்கியப்படுத்தப்பட்ட பலமுள்ள ஐரோப்பாவையே ஆதரிக்கமுடியும். இப்படியான நிலைமைகளில் சோவியத் யூனியன் ஐரோப்பா மீது ஒரு தாக்குதலைத் தொடுக்கத் துணியமாட்டாது. அதற்கு மாறாக பலவீனமுள்ளதாயும், ஐக்கிய மற்றும் இருந்தால் அது சுலபமாக இரையாகிவிடும். நேட்டோ மீதான எமது கொள்கை உண்மை நிலையிலிருந்தே உருவானதாகும்.

**கேள்வி:**

கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர்களான ஹீத், தாச்சர் ஆகியோருக்கு கொடுத்த நெருக்கமான அன்பான வரவேற்பை எவ்வாறு விளக்குவீர்கள்?

(பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக்கள் இதை பூர்ஷுவாக்களுக்கான ஆதரவாகக் கணிக்கின்றனர்?)

**பதில்:**

பர்மா, தாய்லாந்து போன்ற பல தென் கிழக்காசிய நாடுகளில் கம்யூனிஸ்டுக்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்கு புரட்சிகரத் தளப்பிரதேசங்களும் உள்ளன. சீனாவிற்கும் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும் இராஜிய உறவுகள் ஏற்படுத்தப்பட்டபோது சீனா அந்த ஆயுதப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதை நிறுத்திக் கொள்ளுமென அந்த அரசாங்கங்கள் எதிர்பார்த்தன. தலைவர் மாவோ இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தினார். ''விடுதலை இயக்கங்களை சீனா ஆதரிக்காவிட்டால், எம்மை கம்யூனிஸ்ட் கட்சியென எவ்வாறு கூறமுடியும். நாடுகளுக்கிடையிலான உறவு வேறு; கட்சிகளுக்கிடையிலான உறவு வேறு'' எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

நாம் சமாதான சகவாழ்வுக்கான பஞ்சசீலக் கொள்கையைக் கொண்டுள்ளோம். நாம் மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை. நாம் பிரிட்டிஷ் பூர்ஷுவாக்களை ஆதரிப்பதில்லை பிரிட்டிஷ் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களை ஆதரிக்கின்றோம். எமது அனுதாபத்தையும் ஆதரவையும் வெளிக்காட்டும் முகமாக நாம் பெருமளவில் பிரசாரம் செய்துள்ளோம். எமது பத்திரிகைகளில் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் முதலியன தொடர்பாக கட்டுரைகளைப் பிரசுரிக்கின்றோம். கொன்சர்வேட்டிவ் கட்சியும், தொழிற் கட்சியும் பூர்ஷுவாக் கட்சிகள் என நாம் கருதுகின்றோம். ஆனால் கொன்சர்வேட்டிவ் கட்சி சோவியத் யூனியன் தொடர்பாக தெளிவான நிலையைக் கொண்டுள்ளது. சோவியத்தின் விஸ்தரிப்புக் கொள்கையை அது எதிர்க்கின்றது.

தாச்சரோ, ஹீதோ வர விரும்பினால் நாம் அதை மறுக்க முடியாது. அது ராஜிய ஒழுங்கு. (Protocol) சோவியத் யூனியனை அவர்கள் பகிரங்கமாக கண்டிப்பதை நாம் வரவேற்கின்றோம். ஆனால் இதற்காக நாம் அவர்களின் பூர்ஷுவாக் கொள்கைகளை ஆதரிக்கின்றோம் என்ற அர்த்தமாகாது.

**கேள்வி:**

மூன்றாவது உலகின் விடுதலை இயக்கங்களுக்கு வழங்கும் ஆதரவிற்கும், அவற்றின் அரசாங்கங்களுக்கு வழங்கும் ஆதரவிற்கும் இடையே ஏதாவது முரண்பாட்டை காணுகிறீர்களா?

ஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்க வல்லரசுகளுக்கும் எதிரான பிரதான சக்தி ஆயுதம் தாங்கிய மக்கள் என்றால் அரசுத் தலைவர்களின் பாத்திரத்திற்கு ஏன் அழுத்தம் கொடுக்கப்படுகிறது?

**பதில்:**

இரண்டு மேலாதிக்க வல்லரசுகளையும் எதிர்ப்பதில் மூன்றும் உலக நாடுகள் பிரதான சக்தியாக விளங்குகின்றன. இதனால் சகல மூன்றும் உலக நாடுகளும் அவற்றை எதிர்க்கின்ற என்ற அர்த்தமாகாது, இந்த நாடுகளில்[சில பிற்போக்கானவை. இவற்றைப்பற்றி ஒரு வர்க்க ஆய்வை நாம செய்தல் வேண்டும். பெரும்பாலான நாடுகளில் அரசாங்கமும் மக்களும் ஒரே கோரிக்கையை விடுக்கின்றன. வேறு சில நாடுகளில் அரசாங்கங்கள் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக செயற்படுகின்றன.

எந்த நாட்டு மக்களும் நல்லவர்கள். ஆனால் அரசாங்கங்கள் வேறுபட்டவை. சில அரசாங்கங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

அரசியலில் நேர்மை பலத்தின் விளைவு; கபடம் பலவீனத்தின் விளைவு!

# சீனமக்களும்-அரசும் என்றும் உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் பக்கத்திலேயே நிற்பார்கள்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. சில அரசாங்கங்கள் மக்களை எதிர்க்கின்றன. நாம் இவற்றிற்கிடையே வேறுபாட்டைக் காண வேண்டும். உதாரணத்திற்கு சயரேயை எடுத்துக் கொள்வோம். ஆபிரிக்க நாடுகளில் மொபுடுவுக்கு கெட்ட பெயர் உண்டு. எவ்வாருயினும் இந்தவருடம் (1977) மார்ச் மாதம் சோவியத் யூனியன், கியூபா ஆதரவுடன் ஆயுதப்படைகள் அந்நாட்டை ஊடுருவல் செய்த போது மொபுடு மக்களை அணிதிரட்டத் துணிந்தார். அவர் பணிந்துபோகவில்லை. கியூபாத் தாக்குதலை விரட்டியடித்தார். நாம் அவரை ஆதரித்தோம். நாம் தலைவர்களது பாத்திரத்திற்கு அழுத்தம் கொடுக்கிறேம். - உண்மையில் அவர்கள் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கின்றனரா? இல்லாவிட்டால் நாம் அவர்களைக் கண்டித்து எதிர்ப்போம்.

**கேள்வி:**

ஒப்பெக், கூட்டுச்சேரா இயக்கங்களின் முக்கியத்துவம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:**

ஒப்பெக் போன்ற இயக்கங்கள் இரண்டு மேலாதிக்க லல்லரசுகளுக்கு எதிராக ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தை வகித்து வருகின்றன.

## அமெரிக்காவுடன் ஐக்கியப்படுவதென்பதோ, ஆயுதங்கள் வாங்குகின்றேம் என்பதோ புனையப்பட்ட பொய்களே!

1975-ல் ''எண்ணெய் யுத்தம்'' மேலாதிக்க வல்லரசுகளுக்கு எதிரான ஒரு சக்தி வாய்ந்த தாக்குதலாகும். எண்ணெய் இல்லாத நாடுகளுக்கு சில பிரச்சினைகளை உருவாக்குகின்றபோதும் ஒப்பெக் நாடுகள் எண்ணெய் விலையை உயர்த்துவது நியாயமானதே. அவர்கள் எதிரிகளைத் தாக்கும்போது நண்பர்களைப் புண்படுத்த விரும்பவில்லை. கூட்டுச்சேரா இயக்கத்தை நாம் ஆதரிக்கின்றேம். அது மூன்ருவது உலகின் நலன்களுக்கு முரண்பட்டதல்ல, அவை மேலாதிக்க வல்லரசுகளை எதிர்க்கின்றன.

**கேள்வி:**

விடுதலை இயக்கங்களுக்கும், அன்னிய அரசாங்கங்களுக்கும் என்ன அடிப்படையில் இராணுவ உதவி வழங்கப்படுகின்றது?

**பதில்:**

நாங்கள் இராணுவ உதவி கொடுப்பதன் நோக்கம் விடுதலைப் போராட்டங்களுக்கு உதவி செய்வதற்கேயாகும். அங்கோலாவை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். மூன்று பிரிவினரும் விடுதலை இயக்கங்களே. உணவு, உடை என்ற ரீதியில் பொருளாதார உதவியையும், ஆயுத உதவிகளையும் மூன்று இயக்கங்களுக்கும் வழங்கினேம். போத்துக்கலிடமிருந்து விடுதலை பெறப்பட்டது. நாம் பிரதி உபகாரமாக எதையும் கோரவில்லை. சோவியத் யூனியனின் ''உதவி'' எனப்படுவது வேறு விதமானது. அவர்கள் உலகத்திலேயே மிகப்பெரிய ஆயுத வியாபாரிகள். கொரிய யுத்தத்தின்போது சீன மக்கள் உபயோகித்த சோவியத் ஆயுதங்களுக்குப் பணம் செலுத்தப்பட்டது.

சோவியத் உதவி அங்கோலாவில் உள்நாட்டு யுத்தத்தைத் தோற்றுவித்ததும், நாமும் அதைச் செய்யாமல் மூன்று பிரிவினருக்கும் வழங்கிய உதவிகளை நிறுத்திக்கொண்டோம். எமது உதவி கொள்கையின் அடிப்படையிலேயே இருக்கிறது என்பதை நீங்கள் அவதானிக்கலாம்.

நாம் அங்கோலாவைப் பாராட்டினேம். ஆனுல் அந்த அரசாங்கத்தை அங்கீகரிக்கவில்லை. இராஜிய உறவை ஏற்படுத்திக் கொள்வதென்பது அந்த அரசாங்கத்தை சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்வதென்பதாகும்- அதாவது சோவியத்யூனியனும், கியூபாவும் அந்த நாட்டில் இடங்கொண்டிருப்பதை ஏற்றுக்கொள்வதாகும். இது சட்ட ரீதியாகிவிட்டால் மற்ற ஆபிரிக்க நாடுகள் சமாதானமாயிருக்க மாட்டா.

**கேள்வி:**

வெளிவிவகாரக் கொள்கையில் 'நால்வர் கோஷ்டியின்' செல்வாக்கு என்ன?

**பதில்:**

பல்வேறு துறையில் 'நால்வர் கோஷ்டி' பெரும் அழிவு வேலைகளைச் செய்தது. ஆனுல் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தமட்டில் தலைவர் மா ஓ பிரதமர் சௌ வின் உறுதியான கட்டுப்பாட்டில் இருந்தது. வெளி வர்த்தகம, கலாச்சாரப்பரிவர்த்தனைகளில் ஓரளவு செல்வாக்கு இருந்தது என்னவோ உண்மைதான். மூன்று உலகங்கள், மேலாதிக்க வல்லரசுகள் அல்லது ஐரோப்பா சம்பந்தப்பட்ட எமது கொள்கையில் அவர்கள் எந்தப்பாத்திரத்தையும் வகிக்கவில்லை. 'நால்வர் கோஷ்டி'யைத் தகர்த்தபின்னா எமது கொள்கைகளில் அதிகம் மாற்றம் இல்லை. எமது தற்போதைய கொள்கையும், முன்னைய கொள்கையும் ஒன்றே.

**கேள்வி.**

சுயசார்புக் கொள்கையில் ஏதாவது மாற்றம் உண்டா — வெளிநாடுகளுடன் அதிக அளவில் பரிவர்த்தனைகள், அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்கள் பெறப்படுவதான வதந்திகள்பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:**

அமெரிக்காவிடமிருந்து சீன ஆயுதங்கள் பெறுகின்றது எனக் கூறப்படுவதில் உண்மை இல்லை. வெளிவர்த்தகத்தைப் பொறுத்தமட்டில் நாம் மா ஓ வின் மார்க்கத்திற்குத் திருப்பியுள்ளோம்.

எண்ணெய், நிலக்கரி ஏற்றுமதியை 'நால்வர் கோஷ்டி' 'நாட்டை விற்பது' என வர்ணித்தது. வெளிவர்த்தக அமைச்சை ''காட்டிக்கொடுக்கும் அமைச்சு'' எனக் கூறிற்று. அவர்களைப் பொறுத்தமட்டில் வளர்ச்சியடைந்த தொழில் நுட்பத்தையோ அல்லது பொருள்களை இறக்குமதிசெய்வதையோ ''அன்னியப் பொருள்களுக்கு மதிப்புக்கொடுப்''பதாகும். தலைவர் மா ஓ வின் படைப்பின் ஐந்தாவது தொகுதியை பிரசுரிப்பதற்கு ஏழு எட்டு வருடங்கள் இவர்கள் தடையாய் இருந்தனர். அவர்களது மார்க்கம் தலைவர் மா ஓ வின் மார்க்கத்திற்கு விரோதமாயிருந்ததாலேயே இதைச் செய்தனர். சுயசார்புக் கொள்கையென்பது சீனுவின் பிரதான சக்தியாய் விளங்கவேண்டுமென்பதை ''பத்துப் பாரியஉறவு முறைகளில்'' விளக்கிய மாஓ அன்னியதொழில் நுட்பமும் உதவியும் இரண்டாம் பட்சமானது (Subsidiary) எனத் தெரிவித்திருந்தார். நாம் ஒருதலைப்பட்சத்தை எதிர்க்கிறேம். முற்றுமுழுதாக ஒதுங்கியிருத்தல் எம்மைப் பின்தங்க வைக்கும். அதே சமயம் அன்னிய நாடுகளில் பூரணமாகத் தங்கியிருத்தல் அதேபோலத் தீங்கு விளைவிக்கும்.

அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களை வாங்குவதுபற்றி சீன ஆலோசிக்காது. ஆக்கிரமிப்பாளர்களைப் பொறுத்தவரை நாம் ஆயுதங்களில் பிரதானமாகத் தங்கியிருப்பதில்லை. ஒருயுத்தத்தில் மக்களே முதன்மையானவர்கள் ஆயுதங்கள் இரண்டாம்பட்சமானவை ஆயுதப் பிரச்சினையை நாம் சுயமாகவே தீர்த்துக்கொள்வோம்.

**கேள்வி:**

அணு ஆயுதங்கள்பற்றிச் சீனுவின் கொள்கையென்ன?

**பதில்:**

அணு ஆயுதங்கள் உபயோகிப்பதை நாம் திட்டவட்டமாக எதிர்க்கின்றேம்.

மேலாதிக்க வல்லரசுகள் அணு ஆயுதங்களையிட்டு ஒன்றையொன்று போட்டா போட்டியிடுகின்றன. அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு அதிக செலவு பிடிக்கின்றது. மக்களைச் சுரண்டியே அவை உற்பத்திசெய்யப்படுகின்றன. ஆயுதங்களை மக்கள் உண்ணவோ உடுக்கவோ முடியாது. சகல ஆயுதங்களும் நிச்சயமாக அழிக்கப்படல் வேண்டுமென நாம் கருதுகின்றேம்.

அணு ஆயுதங்களை அகற்றுவதற்கு இரண்டு முன் நிபந்தனைகள் உள்ளன என நாம் நினைக்கின்றேம். முதலாவதாக அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள சகல நாடுகளும் தாம் அவற்றை முதலில் உபயோகிக்க மாட்டோமெனப் பிரகடனம் செய்தல் வேண்டும். இரண்டாவதாக இரண்டு மேலாதிக்க வல்லரசுகளின் வெளிநாட்டுத்தளங்கள் வாபஸ் பெறப்படல் வேண்டும் அல்லது அழிக்கப்படல் வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் பூர்த்திசெய்யப்பட்டால், அணு ஆயுதங்களை மட்டுப்படுத்தல், அல்லது ஒழித்தல் தொடர்பாக ஒரு அனைத்துலக மகாநாடு கூட்டப்படலாம்.

சீனுவிடம் இன்று அணு ஆயுதங்கள் உள்ளன. மேலாதிக்க வல்லரசுகளின் ஏகபோகத்தை முறியடிக்கவும், அவை, அவற்றை உபயோகிக்கு முன் யோசிக்க வைப்பதற்காகவுமே நாம் இவற்றைக்கொண்டுள்ளோம். ஒவ்வொரு தடவை அணு ஆயுதப்பரீட்சை செய்யும்போதும், சீன அதை எந்தச்சமயத்திலும் முதலாவதாகப் பிரயோகிக்கமாட்டாதெனப் பிரகடனம் செய்துவருகின்றது.

# யாருடன் ஐக்கியப்படுவது? யாரை எதிர்ப்பது?

### தலைவர் மாஓ 1962 ஜனவரி 30

தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுடனும், நகரப்புற குட்டி பூர்ஷுவாக்களுடனும், தேசபக்த தேசிய பூர்ஷுவாக்களுடனும், முதல் முக்கியமாக விவசாயிகளுடன் கட்டாயமாக ஐக்கியப்படல் வேண்டும். விஞ்ஞானிகள், பொறியியலாளர்களும் தொழில் நுட்ப வியலாளர்களும் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நடிகர்கள், மருத்துவ ஊழியர்கள், பத்திரிகாசிரியர்கள் என்ற புத்திஜீவிகள் தனியான ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் முதலாளி வர்க்கத்தையோ அல்லது பாட்டாளி வர்க்கத்தையோ சார்ந்தவர்களாகும். புரட்சிகர புத்திஜீவிகளுடன் மட்டும் தான் நாம் ஐக்கியப்படல் வேண்டுமா? இல்லை புத்திஜீவிகள் தேச பக்தர்களாக இருக்கும் வரை அவர்களுடன் நாம் ஐக்கியப்பட்டு அவர்கள் தமது வேலையைச் செவ்வனே செய்வதற்கு உதவுவோம். தொழிலாளர்கள், விவசாயிகள், நகர்ப்புற குட்டி பூர்ஷுவாக்கள், தேச பக்த புத்தி ஜீவிகள், தேச பக்த முதலாளிகள், ஏனைய தேச பக்த ஜனநாயக வாதிகள் எல்லோருமாக மொத்த சனத்தொகையில் 95 வீதத்திற்கு மேற்பட்டவர்களாகும். எங்கள் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தில் இவர்கள் அனைவரும் மக்கள் என்ற ரகத்தைச் சேர்ந்தவர்கள். மக்கள் மத்தியில் நாம் கட்டாயமாக ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

மக்கள் ஜனநாயகசர்வாதிகாரம் நிலப்பிரபுக்களை செல்வந்த விவசாயிகளை, எதிர்ப் புரட்சி வாதிகளை, கெட்ட பிரகிருதிகளை, கம்யூனிச விரோத வலதுசாரிகளையே ஒடுக்க வேண்டும். எதிர்ப்புரட்சிவாதிகள், கெட்ட பிரகிருதிகள், கம்யூனிச விரோத வலதுசாரிகளே நிலப்பிரபுத்துவ வர்க்கத்தையும், பிற்போக்கு பூர்ஷுவாக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இந்த வர்க்கங்களும் கெட்டவர்களும் சனத்தொகையில் 4 அல்லது 5 வீதத்தினரேயாகும். அவர்களையே திருந்திக் கொள்வதற்கு நாம் நிர்ப்பந்திக்க வேண்டும்.

6-ம் பக்கம் பார்க்க

**சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் முகமூடி உலக மக்கள் முன் கிழித்தெறியப்படல்வேண்டும்!**

# சண்முகதாசனின் புரட்டல்களுக்குப் பதில்

''இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மூன்று உலகங்கள் பற்றிய கோட்பாட்டை நிராகரிக்கின்றது'' என்ற தலைப்பில் ஒரு சிறு பிரசுரம் சண்முகதாசனின் சகபாடிகளினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இப்பிரசுரத்தின் மூலகர்த்தா வேறு யாருமல்ல. சண்முகதாசனேயாவார். இப்பிரசுரம் கட்சியின் விஷேச மாநாட்டிற்கு சண்முகதாசனால் முன்வைக்கப்பட்ட அறிக்கையாகும்.

மேற்படி பிரசுரத்தை எல்லோரும் ஒருமுறையாவது படிக்க வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். ஏனெனில் அப்பொழுது தான் சண்முகதாசனின் மாக்சிசப் புரட்டல்களையும், திரித்தல்களையும், மழுப்பல்களையும் ஒருவரால் புரிந்து கொள்ள முடியும். அதில் உள்ள பல முக்கியமான விடயங்களுக்கு நாம் ஏற்கனவே எமது விஷேச மாநாட்டுக்கு எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் (கடந்த பாட்டாளியில் வெளிவந்தது) விளக்கமான பதில் கொடுத்திருக்கின்றோம். இருந்த போதும் மேலும் சில புரட்டல்களுக்கு பதில் கொடுப்பது அவசியமாகும்.

சண்முகதாசன் தனது பிரசுரத்தில் சீனு மூன்று உலகக் கோட்பாட்டின் மூலம் முதலாளித்துவ நாடுகளுடனும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் ஐக்கியப்படுகின்றது என்றும், இது பயங்கரமான சந்தர்ப்பவாதம் என்றும் கூறியுள்ளார். சீனு முதலாளித்துவ நாடுகளுடனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் எவ்வாறு ஐக்கியப்பட்டுள்ளது என்பதை தக்க ஆதாரங்களுடன் சண்முகதாசனல் எடுத்துக்கூற முடியுமா? ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவை என்பதும், அவற்றை நமக்குச் சாதகமாகப் பாவிப்பது என்பதும் மாக்சிச-லெனினிச வழிமுறையாகும். இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பும், யுத்தத்தின் போதும் தோழர் ஸ்டாலின் அன்றைய உலக நிலைமைகளை கையாளும் போது இதே மாக்சிச-லெனினிச வழிமுறையையே பின்பற்றினர். அன்று உலகப் பொது எதிரியாக விளங்கிய பாசிசத்தை தோற்கடிப்பதற்கு பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளுடன் தோழர் ஸ்டாலின் சில உடன்பாடுகளுக்கு வந்தார். இவ் உடன்பாட்டின் அர்த்தம் ஏகாதிபத்திய நாடுகளுடன் ஐக்கியப்படுவதல்ல. மாறாகப் பொது எதிரியைத் தோற்கடிப்பதற்கான பாதையில் எதிரிகள் மத்தியில் உள்ள முரண்பாடுகளை நமக்குச் சாதகமாகப் பாவிப்பது என்பதாகும். தோழர் ஸ்டாலினின் அன்றைய அணுகுமுறைகளை ரொட்சிசவாதிகள் இன்றைய சண்முகதாசனின் பாஷையிலேயே கூக்குரலிட்டு தோழர் ஸ்டாலினுக்கு எதிராக வசைமாரி பொழிந்தனர். இறுதியில் இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் ஸ்டாலினும் உலக மக்களுமேயாவர்.

மேலும் அப்பிரசுரத்தில் எல்லா ஏகாதிபத்தியங்களையும் ஒரே நேரத்தில் எதிர்த்துப் போராட வேண்டும் என்று கூறப்படுகின்றது. அதுமட்டுமன்றி இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் சமமானவை என்றும், எது கூடுதலான அளவில் பயங்கரமானது என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவது மாக்சிச-லெனினிசத்திற்கு எதிரானது என்றும் கூறப்படுகின்றது. சண்முகதாசனின் தத்துவ சூனியத்தை எவ்வாறு அழைப்பது என்பது எமக்கு விளங்கவில்லை. தலைவர் மாஓவின் புகழ்பெற்ற தத்துவக் கட்டுரையான முரண்பாடு பற்றி என்ற கட்டுரையின் நான்காவது பகுதியான **பிரதான முரண்பாடும் ஒரு முரண்பாட்டின் பிரதான அம்சமும்** என்ற பகுதியில் மாக்சிச-லெனினிசவாதிகள் முரண்பாடுகளையும், பிரதான முரண்பாட்டையும், அவற்றின் பிரதான அம்சத்தையும் எவ்வாறு கையாள வேண்டும் என்று மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் விளக்கியிருக்கின்றார்.

இரண்டு மேலாதிக்க வல்லரசுகளும் சமமானவை என்பதும், எல்லா ஏகாதிபத்தியங்களும் ஒரே மாதிரியானவை என்பதும் அடிப்படையில் லெனினிச விரோதமானதே. ஏனெனில் முதலாளித்துவத்தின் சமனற்ற வளர்ச்சியைப் பற்றி தோழர் லெனின் மிகவும் தெளிவாகவே எடுத்துக்கூறினார். தலைவர் மாஓ அமெரிக்க ஏகாதிபத்தியம் தற்பாதுகாப்பு நிலையிலும் சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தாக்கும் நிலையிலும் உள்ளது எனவும் இந்நிலை வளருமே தவிர மாற்றம் அடையாது எனவும் எடுத்துக் கூறினர். மாக்சிச-லெனினிச உண்மைகள் இவ்வாறு இருக்க மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும் சமமானவை என்ற சண்முகதாசனின் தர்க்கம் அடிப்படையில் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மையை மூடி மறைப்பதாகவே உள்ளது. இதனால் தான் போலும் சண்முகதாசனும் அவரது சர்வதேசக் கூட்டாளிகளும் இன்று சமூக ஏகாதிபத்தியத்தினதும் அதன் உள்ளூர் ஏஜண்டுகளினதும் பாராட்டுகளைப் பெற்று வருகின்றனர்.

மேலாதிக்க வல்லரசுகளுக்கு எதிரான பரந்த ஐக்கிய முன்னணி அமைப்பது என்ற சீனுவின் கோஷம் வர்க்க சமரசத் தன்மை கொண்டதும், வர்க்க அடிப்படை அற்றதும் என்று அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் தன்மைக்கும், அதன் தலைமையில் அமையும் ஐக்கிய முன்னணியின் தன்மைக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை புரிந்து கொள்ள முடியாமையினாலேயே கடந்த பதினைந்து வருடங்களில் சண்முகதாசனின் தலைமையால் ஒரு சிறியளவு நண்பர்களைத் தானும் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இரண்டாவது உலக யுத்த காலகட்டத்தில் தோழர் ஸ்டாலினால் முன்வைக்கப்பட்ட பாசிசத்திற்கு எதிரான உலகம் பரந்த ஐக்கிய முன்னணிக்கான கோரிக்கையும், ஜப்பானிய எதிர்ப்புப் போராட்டத்தில் தலைவர் மாஓ முன்வைத்த தேசிய ஐக்கிய முன்னணிக்கான கோரிக்கையும் எவ்வாறு வர்க்க அடிப்படை அற்றது என்பதை சண்முகதாசன் சற்று விளக்குவாரா?

அடுத்த பெரும் புரட்டல் தான் விசனத்திற்குரியது. தோழர் லெனின் உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற மாக்சின் கோஷத்

## அரசியல் மாணவன்

தை சற்று திருத்தி ''உலகத் தொழிலாளர்களே! சகல ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்'' என்று கூறினர் என்று அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது. சண்முகதாசன் மாபெரும் லெனின் மேற்கோளை தலைகீழ கப் புரட்டி யாரை ஏமாற்றப் பார்க்கின்றார். உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற புகழ் பெற்ற மாக்சினுடைய வாசகத்துடன் தோழர் லெனின் அடக்கப்பட்ட காலனி நாடுகளையும் மக்களையும் சேர்த்து ''உலகத் தொழிலாளர்களே! ஒடுக்கப்பட்ட தேசங்களே ஐக்கியப்படுங்கள்!'' என்று தான் லெனின் கூறினரே தவிர சண்முகதாசன் கூறும் புரட்டல் போல் அல்ல.

அடுத்த ஒரு தர்க்கம் இன்று சோஷலிச முகாம் இருக்கின்றதாம். அந்த சோஷலிச முகாமில் மனித இனத்தின் கால் பங்கு இப்பொழுதும் உள்ளனர் என்பதாகும். இன்று சண்முகதாசனின் பார்வையில் இருபது லட்சம் சனத்தொகையைக் கொண்ட அல்பேனியாவில் மட்டுமே உண்மையான சோஷலிசம் நிலவுகின்றதாம். அப்படியாயின் மனித இனத்தின் கால் பங்கு கிட்டத்தட்ட நூறு கோடி பேர் எந்த எந்த சோஷலிச நாடுகளில் வசிக்கின்றனர். இன்று சோஷலிச முகாம் பற்றி கூச்சல் போடுபவர்கள் சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது சர்வதேச ஏஜண்டுகளுமேயாவர். அப்படியாயின் சண்முகதாசனின் சோஷலிச முகாம் எது? திரிபுவாத முகாம் என்பது தான் உண்மை.

கூட்டுச்சேரா இயக்கம் பற்றியும் சண்முகதாசன் தனது ''தத்துவ ஞானத்தால்'' ஆய்வு செய்து உள்ளார். இதன் உண்மை நிலை பற்றி நாம் கூறுவது அவசியம். கூட்டுச்சேரா இயக்கத்தை சீனுவோ அல்லது மாக்சிச-லெனினிசக் கட்சிகளோ உலகில் உருவாக்கவில்லை. சீனுவினதும் உலகின் மாக்சிச-லெனினிச வாதிகளினதும் விருப்பங்களையும் மீறி அத்தகைய ஒரு அமைப்பு உலகில் தோன்றி வளர்ந்து சர்வதேச அரங்கில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய அமைப்பை சீன அரசாங்கம் எவ்வாறு கையாள வேண்டும். அந்த அமைப்பை முற்று முழுதாகத் தாக்கி வல்லரசு முகாம்களுக்கு நேரடியாகத் தள்ளுவதா? அல்லது அதன் சாதகமான அம்சங்களுடன் ஐக்கியப்பட்டு அவ் அமைப்பை வல்லரசுகளுக்கு எதிரான நிலைக்குக் கொண்டுவருவதா, கூட்டுச்சேரா இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி? உலகில் அதனால் ஏற்படும் சாதக-பாதக தாக்கங்கள் பற்றி ஒரு முழுமையான கணிப்பீட்டின் அடிப்படையிலேயே சீன அரசாங்கம் அவ் இயக்கத்தைக் கையாண்டு வருகின்றது. இதைச் சண்முகதாசனல் விளங்கிக் கொள்ள முடியாமைக்கு அவரது தத்துவ வறுமையையே குறைகூற வேண்டும்.

கடைசியாக அப்பிரசுரத்தில் உண்மையான எந்த ஒரு மாக்சிச-லெனினிச வாதியும் உலகப் புரட்சி வெற்றி பெறுமுன் ''ஒரு புதிய சர்வதேச பொருளாதார அமைப்பு'' பற்றி எண்ணிப் பார்க்க முடியுமா? இவ்வாறு செய்வது முதலாம்தர ஏமாற்றாகும் என்று கூறப்பட்டுள்ளது. இந்தத் தர்க்கம் சரியானது என்று சண்முகதாசன் நம்புவாரேயானால் தன்னையே ஒரு முதல்தரமான ஏமாற்றுக்காரன் என்று ஒப்புக்கொண்டேயாக வேண்டும். ஏனெனில் இலங்கைப் புரட்சி வெற்றி

(8-ம் பக்கம் பார்க்க)

3-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்று வருகின்றன. இதைத் தடுக்க கூட்டணித் தலைவர்களோ அல்லது அவர்களது தமிழ் ஈழத்தை மீட்க வெறும் சபதங்கள் செய்யும் தொண்டர்களாலோ முடியவில்லை. எதைப் பற்றிப் பேசும்போதும் நிதானம் இருக்க வேண்டும். ஒரு கொள்கையாக ஒரு விடயம் கட்சி ஒன்றினால் முன்வைக்கப்படும் போது தான் முன்வைக்கும் கொள்கையால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் அது எவ்வளவிற்கு மக்களைப் பாதிக்கும் என்பதையும் தீர்க்கதரிசனத்துடன் அறிந்து கொள்ளல் வேண்டும். உடனடியாக லாபங்களையும் வெறும் உணர்ச்சிக்காகவும் பேசப்படக்கூடிய பேச்சுக்களினாலும் கொள்கைகளினாலும் தமிழ்பேசும் மக்கள் இதுவரை அனுபவித்த - இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்னல்கள் ஏராளம் என்பதை இன்ருவது தமிழ் மக்கள் உணர வேண்டும்.

தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தவறு கண்டிக்கப்படவேண்டியது. அதற்கு சரியான வழிகளில் சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் கொள்கைகளை வகுத்து இயக்கம் நடத்துவது தான் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவி செய்யும்.

இந்த நாட்டில் நிலமற்ற சிங்கள மக்களுக்கு அப்பிரதேசங்களிலேயே நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை தமிழ்த் தலைவர்கள் என்றுமே கிழப்பியது கிடையாது. அன்று நெற்காணி மசோதா போன்ற சிங்கள விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் சட்டங்களை கூட எதிர்த்தவர்கள் இதே தமிழ்த் தலைவர்கள் தான் என்பதை நாம் மறக்க முடியாது.

அதேபோல் பெரும் நிலச்சொந்தக்காரர்களின் காணிகள் நிலமற்றவர்களுக்கு பகிர்ந்து அளிக்கடபடும் நிலைமைகளை தமிழ்த் தலைவர்கள் தமது நிலையாகக் கொள்ளவில்லை. காரணம் அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் தாமும் தமது சகாக்களும் வடகிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்படவேண்டி வருமே என்ற அச்சத்தாலாகும்.

ஆதலால் தான் நிலமற்ற சிங்கள மக்களை தமிழ்ப் பிரதேசத்தில் திட்டமிட்டுக் குடியேற்றும் போது ஒரே நேரத்தில் இரண்டு விடயங்களை ஆளும் வர்க்கத்தினர் செய்கின்றனர். ஒன்று அவர்களுக்கு நிலம் வழங்குவது, மற்றது தமிழ் மக்களின் பிரதேசத்தை திட்டமிட்டே இனவாதக் கண்ணோட்டத்தில் அபகரிப்பதாகும்.

அவ்விதமான நடவடிக்கைகளுக்கு தூண்டுகோலாக அமைவது தமிழ்த் தலைவர்களின் நடவடிக்கைகளும், வெறும் கூக்குரல்களாகவுமே உள்ளது. தமிழர் கூட்டணியின் எல்லைக் குடியேற்றக் கோஷங்களால் மேலும் வேகமாக சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுவதைத் தான் தங்களது கோஷத்தின் விளைவாகப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

5-ம் பக்கத் தொடர்ச்சி

மக்கள் ஜனநாயக [சர்வாதிகாரத்தின் இலக்கு அவர்களேயாகும். நாம் எவர்களோடு நிற்க வேண்டும்? சனத்தொகையில் 95 வீதத்திற்கு மேற்பட்ட வெகுஜனங்களுடனு? அல்லது நிலப்பிரபுக்கள், செல்வந்த விவசாயிகள், எதிர்ப்புரட்சிவாதிகள், கெட்ட பிரகிருதிகள், வலதுசாரிகளை சனத்தொகையில் உள்ளடக்கிய 4 அல்லது 5 வீதத்தினருடனு? நாம் மககள் பக்கம் சாரவேண்டுமே தவிர அவர்களின் எதிரிகளுடன் சாரக்கூடாது. ஒரு மாக்சிச-லெனினிசவாதிக்கு இது ஓர் அடிப்படை நிலைப்பாடு சம்பந்தமான பிரச்சினையாகும்.

இந்த விடயம் எமது நாட்டைப் பொறுத்தளவில் உண்மையானது போலவே சர்வதேச ரீதியிலும் உண்மையானதாகும். விரைவாகவோ அல்லது காலந்தாழ்த்தியோ, சகலநாட்டு மக்களும், உலக சனத்தொகையில் 90 வீதத்திற்கு மேற்பட்ட வெகுஜனங்கள் புரட்சியை விரும்புவார்கள், மாக்சிச-லெனினிசத்தை ஆதரிப்பார்கள். அவர்கள் திரிபுவாதத்தை ஆதரிக்கமாட்டார்கள். மக்களில் சிலர் திரிபுவாதத்தைச் சிலவேளை சொற்பகாலம் ஆதரித்தாலும் இறுதியில் அதை ஒதுக்கித் தள்ளிவிடுவார்கள். ஏகாதிபத்தியத்தையும் பிற்போக்கையும் எதிர்த்தே தீருவார்கள், திரிபுவாதத்தை எதிர்த்தே தீருவார்கள். ஓர் உண்மையான மாக்சிச-லெனினிசவாதி உலக சனத்தொகையில் 90 வீதத்திற்கு மேற்பட்ட வெகுஜனங்கள் பக்கமே திடமாகக் கட்டாயம் நிற்க வேண்டும்.

(1962ல் தலைவர் மாஓ அவர்களால் நிகழ்த்தப்பட்ட ஓர் உரையிலிருந்து எடுக்கப்பட்டது)

**தத்துவமும் கொள்கைகளும் நடைமுறையால் பரீட்சிக்கப்படல் வேண்டும்!**

# கம்போடிய-வியட்நாம் பிரச்சினையின் பின்னால் இருப்பவர்கள் யார்?

இன்று எல்லைத் தகராறு என்று கூறிக்கொண்டு கம்போடியாவின் பிரதேசத்திற்குள் வியட்நாம் துருப்புக்கள் திட்டமிட்ட ஆக்கிரமிப்பைச் செய்துள்ளன. இது தற்செயலான சம்பவமல்ல. வியட்நாமின் அதிகார வட்டாரங்களின் பின்னால் சமூக ஏகாதிபத்தியம் கால் ஊன்றி உள்ளதையே எடுத்துக் காட்டுகின்றது. சமூக ஏகாதிபத்தியம் ஐரோப்பாவில் தனது நேரடியான தலைமையின் கீழ் இராணுவக் கூட்டணியும், பொருளாதாரக் கூட்டணியும் வைத்து தனது மேலாதிக்கத்திற்கான வழிகளில் செயல்பட்டு வருகின்றது. ஆபிரிக்காவில் கியூபாவைத் தனது கைக்கருவியாகப் பாவித்து ஆபிரிக்காவில் தனது நிலையை உறுதிப்படுத்த முனைகின்றது. அதேபோல் ஆசியாவில் தனது மேலாதிக்க வெறியை நிறைவேற்ற பற்பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளது. இத்தகைய சூழ்ச்சிகளை பல ஆசிய நாடுகளும் மக்களும் இனம் கண்டு முறியடித்தும் வந்துள்ளனர். இப்பொழுது தனது நோக்கத்தை நிறைவேற்ற வியட்நாம் அதிகார வட்டத்தினரை தம் கையுள் சமூக ஏகாதிபத்தியம் போட்டிருப்பதையே வியட்நாமின் அண்மைக்கால நடவடிக்கைகளின் மூலம் தெரியக்கூடியதாக இருக்கின்றது. இதில் ஒன்றுதான் கம்போடிய எல்லையில் திட்டமிட்ட ஊடுருவலை நடத்தி கம்போடியாவை ஆக்கிரமித்து அடிபணியச் செய்யும் முயற்சியாகும்.

வியட்நாமுக்கும் கம்போடியாவிற்குமிடையேயுள்ள தற்போதைய எல்லைக்கோடு காலனித்துவ வாதிகளால் வரையப்பட்டது. அது கம்போடியாவின் தாழ்ந்த பகுதிகளையும், சில தீவு, கடற்பகுதிகளையும் வியட்நாமுடன் இணைத்ததன் மூலம் ஏற்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் கம்போடிய அரசாங்கம், கடந்த காலங்களிலும் தற்போதும் இந்த எல்லையைச் சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொண்டது. அப்போது கம்போடியாவும் வியட்நாமும் 1966 ல் எல்லைப் பிரச்சினை தொடர்பாக ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. 1967 ம் ஆண்டு மே மாதம் 31 ம் திகதி தென் வியட்நாம் விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டி விடுத்த அறிக்கையில் கம்போடியாவின் தற்போதைய எல்லைக்குள் அதன் ஆதிபத்தியத்தை அங்கீகரிப்பதாக அறிவித்தது. 1967 ம் யூன் மாதம் 8 ந் திகதி வியட்நாம் ஜனநாயகக் குடியரசு அரசாங்கம் விடுத்த அறிக்கையிலும் வியட்நாமுக்கும் கம்போடியாவிற்கும் இடையேயுள்ள தற்போதைய எல்லையை அங்கீகரிப்பதாக அறிவித்தது.

எவ்வாறாயினும் அமெரிக்க ஆக்கிரமிப்பு யுத்தம் முடிவடைந்த பின் வியட்நாம் கம்போடிய எல்லை தொடர்பாக வியட்நாமிய அதிகாரிகளின் போக்கு எதிர்விதமாக மாறியது. 1975 ம் ஆண்டு கம்போடியாவின் வெய் தீவை ஊடுருவி வசப்படுத்திய பின் வியட்நாம் கம்போடியாவின் பிரதேசத்துக்குள் அடிக்கடி ஊடுருவல் செய்தது. 1976 ல் வியட்நாம்-கம்போடிய பேச்சுவார்த்தையின் போது 1966, 1967 ல் விடுக்கப்பட்ட உத்தரவாதங்களை வியட்நாமிய அதிகாரிகள் புறக்கணித்தனர்.

பேச்சுவார்த்தை மேசையில் மேலும் கூடிய நிலத்தை அபகரிக்க முடியாமற் போனதும் வியட்நாமிய அதிகாரிகள் ஆயுதப்படைகளைப் பிரயோகித்தனர். 1977 செப்டம்பர் மாதத்திலிருந்து பெரும் எண்ணிக்கையில் படைகளை அனுப்பி கம்போடியா மீது தாக்குதல் தொடுத்தனர். கம்போடியாவின் கிழக்குப் பகுதியில் ஒரு யுத்தம் வெடித்தது. சில பகுதிகளில் வியட்நாமியப் படையினர் கம்போடியாவின் பிரதேசத்துக்குள் பல டசின் கிலோ மீட்டர் உள்ளே சென்றனர். இது வெறும் எல்லை மோதல் அல்ல. இது வியட்நாம் கம்போடியா மீது தொடுத்த ஒரு ஆக்கிரமிப்பு யுத்தமாகும்.

நீதியான யுத்தத்தில் ஈடுபட்டுள்ள கம்போடியாவிற்கு சீனாவின் ஆதரவும், அனுதாபமும், உதவியும் கிடைப்பது சரியானதேயாகும். சீனா எந்த ஒரு நாட்டிற்கும் நிபந்தனையுடன் உதவி வழங்கியது கிடையாது. அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக வியட்நாம் போராடிய காலத்தில் சீனா பதினையாயிரம் கோடி ரூபாய் பெறுமதியான இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கியது. அதற்காக சீனா அந்த நாட்டின் மீது எந்த வித கட்டுப்பாட்டையும் திணித்தது கிடையாது. அதே போலவே கம்போடியாவிற்கு சீனா வழங்கும் உதவி காரணமாக சீனாவே இந்த எல்லைப் பூசலைத் 'தூண்டியது' என வியட்நாமிய அதிகாரிகளின் கூற்று வேடிக்கையானது. உண்மையில் சீனா கம்போடியாவிற்கு வழங்கிய உதவியானது அது வியட்நாமுக்கு வழங்கிய உதவியுடன் ஒப்பிடுகையில் மிகமிகச் சொற்பமே.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான யுத்தத்தில் வெற்றியடைந்ததும், தம்வசம் ஏராளமான ஆயுதங்கள் இருப்பதாலும், அரசியல் ரீதியான நிலைப்பாடும் வியட்நாமிய அதிகாரிகளுக்கு தலைவீக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தென்கிழக்காசியாவில் தம்மை ஒரு 'பெரிய வல்லரசு'' எனவும், உலக இராணுவ வல்லரசுகள் சிலவற்றுள் தாமும் ஒன்று எனவும் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். இந்த ''மூலதனத்தை'' வைத்துக் கொண்டு பிராந்திய மேலாதிக்கத்தைச் செலுத்த முற்படுகின்றனர். அதற்கு ஒரு தேவையான நடவடிக்கையே அவர்கள் முன்வைக்கும் ''இந்தோ சீன சமஷ்டி''. சரியான அரசியல்நிலைப்பாட்டை எடுத்துள்ள கம்போடியா இந்த சமஷ்டிக்கு ஒத்துவர மறுப்புத் தெரிவித்தது மிகவும் சரியானதேயாகும்.

வியட்நாமிய அதிகாரிகளின் இந்தப் போக்கிற்கு சூத்திரதாரி சோவியத் சமூக ஏகாதிபத்தியமே என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. ஆபிரிக்காவில் நாசகார வேலைக்கு ஒரு கியூபாவை வைத்திருக்கிறார்கள். ஆசியாவில் நாசகார வேலைக்கு இப்போது வியட்நாமைத் தயார்ப்படுத்துகிறார்கள். ஏற்கனவே வியட்நாமின் பிரமாண்டமான (அல்லது தென்கிழக்காசியாவில்) கடற்படைத் தளமான காம்ரூன் குடாவை சோவியத் அதிகாரிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக ஜப்பானியப் பத்திரிகை ஒன்று அண்மையில் தகவல் வெளியிட்டது.

வியட்நாம் அதிகார வட்டாரங்களின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்தை மேலும் தூண்டி அதை நியாயப்படுத்துவதன் மூலம் வியட்நாமை மற்றொரு கியூபாவாக ஆசியாவில் மாற்றுவதற்கு சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தன்னாலான சகலதையும் செய்து வருகின்றது. எனவே ஆசிய மக்கள் தமது மத்தியில் விஷவிருட்சம் ஒன்றை வளர்ப்பதற்கு எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் எதிராக மிகவும் எச்சரிக்கையுடனும், விழிப்புடனும் செயல்பட வேண்டும். சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தினதும் அதன் கைக்கூலிகளினதும் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

## சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மை மேலும் அம்பலமாகிறது!

# தமிழ் மக்களும் - இனவாதமும்

3-ம் பக்கத் தொடர்ச்சி

யில் ஒன்றுபடக் கூடிய சிங்கள தமிழ் உழைக்கும் மக்கள் மத்தியில் விஷமாகப் பரவுவதற்கும் வழி சமைக்கப்பட்டது.

இனவாதமும் - தமிழர் பிரச்சினையும் இன்றைய கட்டத்தை நோக்கி வளர்க்கப்பட்டதில் தமிழ் இனத்தின் மத்தியில் உள்ள ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளின் பாத்திரம் எத்தகையது என்பதும் கவனிக்கப்படல் அவசியமானதாகும். மாறி மாறி வந்த அரசாங்கங்களின் சிங்கள ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளால் தமிழ் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்படும் போது அதற்கு எதிராக ''இயக்கம்'' நடத்துகின்றோம், ''போராடுகின்றோம்'' என்று கூறிக்கொண்ட தமிழ்த் தலைவர்களும் அவர்களது ஆளும் வர்க்கக் கட்சிகளும் உண்மையில் சரியான ஒரு இயக்கத்தையோ, போராட்டத்தையோ நடத்தவில்லை. அவர்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அழகாக எடுத்துச் சொல்லி அதன் மூலம் தங்களையும் தங்களது வர்க்கத்தினரையும் வளர்த்துக் கொண்டார்கள். மிகவும் லேசாகவே பாராளுமன்றப் படிகளுக்குச் செல்வதற்கு தமிழர் பிரச்சினையை ஒரு கருவியாகப் பாவித்தார்கள். அதே போல் பதவிகள், பட்டங்கள், உயர் வாழ்க்கைகள் பெறுவதற்கு தமிழ் மக்களை வைத்துப் பேரம் பேசும் நிலைக்கு சென்று அதனால் லாபங்களையும் அடைந்தார்கள். அடிப்படையில் சிங்கள ஆளும் வர்க்கமும் தமிழ் ஆளும் வர்க்கமும் பரஸ்பரம் இனப் பிரச்சினையின் பெயரால் மிகவும் செல்வாக்குடன் வாழ முடிந்தது. இன்றும் சுகபோகத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். அதே வேளை இனவாதக் கொடுமைகளின் உண்மை நிலைமைகளைப் புரிந்து கொள்ளாது ஏமாற்றப்பட்ட சிங்கள-தமிழ் உழைக்கும் வர்க்கத்தினர் மிக மோசமான வாழ்க்கை வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அநீதியும் - அக்கிரமமும் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள ஆளும் வர்க்கத்தினரால் ஏவி விடப்படும்போது அதற்கு எதிராக தமிழ் மக்கள் இயக்கமும், போராட்டமும் நடத்த வேண்டியது அவசியமாகும். அந்த அவசியத்தை உணர்ந்து யாருக்கு எதிராக கொள்கை வகுத்து, யாரைத் தோற்கடிப்பதற்கு யாருடன் ஐக்கியப்பட்டு நீதியையும் நியாயத்தையும் முன்வைத்துப் போராடுவதென்பதில் தெளிவு இருக்க வேண்டும். இதுவரையும், இன்றும் தமிழ் ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளான தமிழ்த் தலைவர்கள் சிங்கள ஆளும் வர்க்கத்தை சிங்கள மக்களிடமிருந்து வேறுபடுத்திக் கொள்ளாது, முக்கியமாக இனவாதத்தினதோ அல்லது தமிழ் மக்களினதோ எதிரி யார் என்பதைத் தெரிந்து கொள்ளாது, சிங்கள இனம் முழுவதையும் தமிழர்களின் எதிரிகளாக்கிய தவறான கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்ததினால், நாடு இரு பெரும் இனக் கலவரங்களை சந்திக்க நேரிட்டது. சாதாரண சிங்கள உழைப்பாளி ஒருவன் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுபவை அநீதி என்ற நிலைமையை உணரச் செய்வதற்குப் பதிலாக ''தமிழர்கள், சிங்களவர்கள் எல்லோரையும் விழுங்க நிற்கிறார்கள்'' என்ற மனப் பீதியை உண்டாக்கும் விதத்திலான கொள்கைகளை தமிழ்த் தலைவர்கள் முன்வைத்து வேலை செய்து வந்துள்ளார்கள். இந்நிலை தனிநாடு என்ற கோஷத்தினால் சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் மோசமான பயப்பீதியை உண்டுபண்ணியது மட்டுமன்றி இனவாத உணர்வுகளை மேலும் தூண்டுவதற்கு உதவி செய்துள்ளது. இந்நிலை தமிழ் மக்கள் மத்தியில் நீடிக்கின்ற வரை தமிழ் மக்கள் தமது விடுதலையைப் பெற முடியாது. அதே போல் இலங்கை முழுவதையும் சொத்துடைய ஆளும் வர்க்கத்தின் கோரப் பிடியிலிருந்து விடுவிக்கவும் முடியாது. சிங்கள உழைப்பாளி மக்கள் மத்தியிலும் தமிழ் உழைப்பாளி மக்கள் மத்தியிலும் எமது நாட்டின் சகல பிரச்சினைகளினதும் குறிப்பாக இனப்பிரச்சினையினதும் உண்மை நிலைமைகளை எடுத்து விளக்கி, ஆளும் வர்க்கம் யார் ஆளப்படும் வர்க்கம் யார் என்பதை கண்டறியச் செய்தல் வேண்டும். தமிழ் சிங்கள மக்களின் பொது எதிரிக்கு எதிராக சரியான கொள்கையின் கீழ் அணிதிரண்டு போராட சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் தம்மைத் தயார்ப்படுத்தத் தவறினால், கடந்த முப்பது வருடங்களுக்கு மேல் சிங்கள தமிழ் ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளால் ஏமாற்றப்பட்டது போன்ற நிலைமைகளே தொடர்ந்தும் வளர்ந்து செல்லும். இதனால் சாதாரண உழைப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்த சிங்கள-தமிழ் மக்கள் மேலும் பாதிக்கப்படக் கூடிய அபாய நிலையே தொடரும். இன ரீதியில் கூடிய பாதிப்புகளைப் பெற்று வரும் இனம் என்ற வகையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள நேர்மையான இளைஞர்களும் பொது மக்களும் நன்கு சிந்தித்து செயல்பட வேண்டிய ஒரு கட்டத்திலேயே இருக்கின்றனர். தமிழ் மக்களுக்கு இதுவரை தலைமை தாங்கிய தலைவர்களின் கொள்கைகள் - நடைமுறைகள் - பேச்சுகள் யாவும் கடந்த காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி எவ்வாறான சாதக - பாதக நிலைமைகளை தமிழ் பேசும் மக்களுக்கு தோற்றுவித்துள்ளன என்பதை விமர்சன ரீதியிலும், சரிக்கும் - பிழைக்கும் உள்ள வேறுபாடு என்ற வகையிலும் ஆராயப்படல் வேண்டும். அவ்வாறான விமர்சன ரீதியான ஆராய்வின் அடிப்படையில் இருந்து தமிழ் பேசும் மக்களின் உண்மையான விடுதலைக்கும், அடிப்படை விமோசனத்திற்கும் நிதானமான, சரியான கொள்கை உருவாக்கப்பட்டு, அவை தேசிய ரீதியில் உறுதியாக முன்னெடுக்கப்படல் வேண்டும். இதைச் செய்வதற்கு தமிழ் பேசும் மக்களின் விடுதலையில் விசுவாசமான நம்பிக்கைகொண்ட இளைஞர் சக்தி இனிமேலும் ஏமாற்றப்படாது சரியான திசைக்கு தங்களை அணிவகுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## ஏகாதிபத்தியங்கள் நீடிக்கின்ற வரை யுத்தங்களும் நீடித்தே தீரும்!

# பாட்டாளி

## சீன-யப்பான் நட்புறவு ஒப்பந்தம் மேலாதிக்கத்திற்கு கிடைத்த அடி!

மக்கள் சீனக் குடியரசும் யப்பானும் சென்ற ஆகஸ்ட் 12-ந் திகதி சமாதானம் நட்புறவுக்கான ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இந்த ஒப்பந்தம் 1973-ம் ஆண்டு செப்டெம்பர் 29-ந் திகதி இரு நாடுகளும் விடுத்த கூட்டறிக்கைக்கு இசைந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்ட நோக்கங்களை மேலும் பலப்படுத்துவதாகவும், அமைந்துள்ளது.

பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் இருநாடுகளும் நிலையான சமாதானத்தையும் நட்புறவையும் ஏற்படுவதற்கு இணங்கியுள்ளதோடு அவற்றிற்கிடையேயான பரஸ்பர உறவில் எதிர்நோக்கக்கூடிய சகலவிதமான தகராறுகளையும் பலாத்காரம் பிரயோகிக்காமலும் அச்சுறுத்தல் செய்யாமலும் பேச்சுவார்த்தை மூலம் சமாதானமாகத் தீர்த்துக் கொள்வதென உறுதி பூண்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் பிரதான அம்சமாக உலக கவனத்தை ஈர்த்தது மேலாதிக்கம் பற்றிய சரத்தேயாகும், ஆசிய பசுபிக் பிராந்தியத்திலோ, அல்லது வேறு எந்தப் பிராந்தியத்திலோ இரு நாடுகளும் மேலாதிக்கம் செலுத்தாதெனவும் அதே சமயம் வேறு எந்த ஒரு நாடோ அல்லது நாடுகளின் குழுவோ அவ்வாறு மேலாதிக்கம் செலுத்தும் முயற்சி எதையும் இரண்டு நாடுகளும் எதிர்க்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சரத்து ஒப்பந்தத்தில் முக்கியமானது என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இன்று சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகள் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் சமதாதிக்கத்தை விஸ்தரித்து வருகின்றனர் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தம் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்திய இடங்களில் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முற்பட்டு வருகின்றனர் அவர்களின் மேலாதிக்க முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகச் சீனவும் ஏனைய சுயகௌரவமுள்ள ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளும் இருந்து வருகின்றன. எனவே முதலில் சீனவைத் தனிமைப்படுத்திவிட்டால் தனது மேலாதிக்கத்தை ஆசியாவிலும் செலுத்தலாமென்பது சமூக ஏகாதிபத்தியவாதிகளின் திட்டம். ஆசியாவிற்கு ஒரு கியுபாவாக வியட்நாமை உருவாக்கிவருகின்றனர். சீன—

(3-ம் கலம் பார்க்க)

★ கருத்துமுதல்வாதம், நிலையியல் இரண்டும் உலகில் மிக எளிதானவை. காரணம், யதார்த்த உண்மையை அடிப்படையாகக் கொள்ளாமலும் யதார்த்தத்தில் பரீட்சிக்காமலும் யார் எவ்வளவு விழல் அலம்ப விரும்பினாலும் அலம்பலாம். மறுபுறம் பொருள் முதல்வாதம், இயங்கியல் இரண்டிற்கும் முயற்சிஎன்பது அவசியம். அவை யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு, யதார்த்தத்தில் பரீட்சிக்கப்பட வேண்டும். ஒருவர் முயற்சி செய்தாலொழிய, அவர் கருத்துமுதல்வாதம் நிலையியல் இவற்றில் சறுக்கி விழுவது சாத்தியம்.

## தலைவர் மாஓவின் நினைவாக

★ நாம் மார்க்ஸிஸவாதிகள் நாம் ஒரு பிரச்சினையை அணுகும்போது யதார்த்தஉண்மைகளிலிருந்து ஆரம்பிக்கவேண்டுமேயன்றி வெறும் வரைவிலக்கணங்களிலிருந்து அல்ல என்றும் இந்த உண்மைகளை ஆராய்வதன் மூலம்நமது வழிகாட்டும் கோட்பாடுகள், கொள்கைகள், வழிமுறைகள் ஆகியவற்றை வகுக்கவேண்டுமென்று மார்க்ஸிஸம் போதிக்கின்றது.



9-9-78

இரண்டாவது நினைவுதினம்

## சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத்தைச் சிலர் மறைக்கப்பார்க்கின்றனர்! காமினியாப்பா

சோவியத் சமூக ஏகாதிபத்தியம் உலகைப் பங்கு போட்டுக் கொள்ளும் முயற்சியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கடும் போட்டா போட்டியில் இறங்கியுள்ளது. இதன் ராணுவ பலமும் ராணுவ கேந்திர நிலையங்களைப் பொறுத்தும் அமெரிக்க ஏகாதிபத்திபத்தை மிஞ்சும் நிலையிலேயே உள்ளது. அதனுடைய வளர்ச்சி உலக மக்களை அடிபணியச் செய்யும் வளர்ச்சியாக வளர்ந்துள்ளது. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மை அதன் ராணுவபலத்தில் மட்டுமன்றி அதன் அரசியல்த் தன்மையிலும் தங்கியுள்ளது.

அது ''சோஷலிசம்'' ''செங்கொடி'' மாக்சிசம் - லெனினிசம்'' ''தேசியவிடுதலை'' ''ஏகாதிபத்திய எதிர்ப்பு'' போன்ற சுலோகங்களைத் தூக்கிக் கொண்டு தனது மேலாதிக்க நோக்கத்தை ஈடேற்ற முயலுகின்றது.

இவ்வாறான தன்மைகளுடன் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மை வளர்ந்துவரும் இவ்வேளை, தாங்களும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பவர்கள் என்று கூறிக் கொள்ளும் சிலர் அதன் பயங்கரத்தன்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். உண்மையில் இத்தகைய நபர்கள் சோவியத்சமூகஏகாதிபத்தியத்தின் மறைமுகமான கையாட்களேயன்றி வேறு யாராகவும் இருக்க முடியாது.

மேற்கண்டவாறு கடந்த 23.8.78ல் கொழும்பு இஸ்லாமிய கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது தோழர் காமினி யாப்பா கூறினர்.

இலங்கை தேசியஒருமைப்பாட்டு இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் செந்திவேல் கலந்துகொண்டு உரையாற்றினர். மற்றும்புரட்சிகர-முற்போக்கு இயக்கங்களின் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

ஜப்பான் சமாதான ஒப்பந்தம் கசப்பாகத்தான் இருக்கும்.

ஆனல் இரு மேலாதிக்க வல்லரசுகளின் காலனி ஆதிக்கம் கெடுபிடி ஆக்கிரமிப்பு, யுத்தவெறி இவற்றை எதிர்க்கும் உலக மக்களும் - தேசங்களும்- நாடுகளும் இவற்றை வரவேற்கின்றனர்.

இந்த ஒப்பந்தம் சீனவோ ஜப்பானே வேறு எந்த ஒரு நாட்டுடன் கொண்டுள்ள உறவை எந்த வகையிலும் பாதிக்க மாட்டாது. இதுபற்றி ஒரு தனியான ஷரத்து இதைத் தெட்டத்தெளிவாகக் கூறுகின்றது. எனவே இந்த ஒப்பந்தம் எந்தஒரு சுதந்திர நாட்டிற்கும் அச்சுறுத்தலாக அமைய மாட்டாது.

மூன்ருவது உலக யுத்தம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் உலகை மறு பங்கீடு செய்ய எத்தனிக்கும் இரு மேலாதிக்க வல்லரசுகளின் முயற்சியைப் பிசுபோடுவதற்காக ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை உலகில் ஏற்படுத்தும் சீனவின் முயற்சிக்கு சீன — ஜப்பான் சமாதான ஒப்பந்தம் ஒரு திருப்பு முனையாக அமையும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

இலங்கை மக்களின் சார்பில் இவ் ஒப்பந்தத்தை பாட்டாளி வரவேற்கின்றது.

## புதிய அரசியல் சாசனத்தால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விதமான ஒரு அரசியல் சாசனம் நடைமுறைக்கு வரும் இவ்வேளை எமது நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமான கட்டத்திற்கு கீழிறங்கியுள்ளது. மாவினுடைய விலை ரூபா 1-12 சதமாக உயர்த்தப்பட்டதால் அரிசியின் விலையும் ஐந்து ரூபாவிற்கு ஏறியுள்ளது. அரிசியும் மாவும் எமது மக்களின் பிரதான அன்றாட உணவுப் பொருள்களாகும். முதலில் அரிசி சீனிக்கு கிடைத்த மானியம் வெட்டப்பட்டது. கூப்பன் புத்தகங்கள் பறிக்கப்பட்டன. இதனல் கிட்டத்தட்ட எழுபது லட்சம் மக்கள் தமது கூப்பன் அரிசியை இழந்தனர். இப்பொழுது மாவின் விலை ரூபா 1-12 சதமாக்கப்பட்டுள்ளது. பாணின விலை ஒரு ரூபாவாகியுள்ளது. ஒரு கொத்து அரிசி ரூபா 2-90 க்கு கிடைக்குமென்று பிரசாரம் செய்யப்படுகின்றது. அது எங்கே என்று மக்கள் இடத்தைத் தேடுகின்றனர். எல்லாம் வெறும் ஏமாற்றும் கண்துடைப்புமாகவேயுள்ளன. மக்கள் மிகவும் விரக்தியுற்றுள்ளனர். ஏன் இந்த யூ. என். பி. அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தோம் என்ற நிலை இன்று மக்கள் மத்தியில் உருவாகி உள்ளது. மக்களின் அதிருப்தியை ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் உணராமல் இல்லை. அவர்கள் அதை உணர்ந்ததாலேயே முன்கூட்டியே பல அடக்குமுறைச் சட்டங்களை தயார்ப்படுத்தி வைத்துள்ளனர். அதே போல் சக்தி மிக்க தனி மனித சர்வாதிகாரத்திற்கான அரசியல் சாசனத்தையும் உருவாக்கி அமுல்படுத்துவதற்கு தயாராகியுள்ளனர். சுருங்கக் கூறின் இலங்கையின் சகல இனத்தைச் சேர்ந்த உழைப்பாளி மக்களான சாதாரண மக்கள் பல வழிகளிலும் ஒரு இருள் சூழ்ந்த நிலைமைகளுக்கு வேகமாகத் தள்ளப்பட்டு வருகின்றனர். இந்த நிலைமைகளை மக்களும் உணர வேண்டும். அதே வேளை பக்களின் அபிலாஷைகளைக் கொண்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் முற்போக்கு புரட்சிகர சக்திகளும், உண்மையான இடதுசாரி சக்திகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

யூ. என். பி. யும் அதன் அதிகார சக்திகளும் எடுக்கக் கூடிய தொழிலாளி வர்க்க விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக உறுதியான விட்டுக்கொடுக்காத போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். குறுகிய வேற்றுமைகளை மறந்து அல்லது சுயநலப் போக்கை விட்டு இந்நாட்டின் அடக்கப்படும் மக்களின் அபிலாஷைகளுக்கு நம்மை அர்ப்பணித்து சகல முற்போக்கு புரட்சிகர சக்திகளும் ஒன்றுபடல் வேண்டும். அவ்வாறான ஐக்கியத்தின் மூலம் மக்களின் பொது எதிரியான யூ. என். பி பாசிசத் தன்மை கொண்ட மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து முறியடிக்க முடியும். இக்கடமைக்காக முற்போக்கு புரட்சிகர சக்திகள் ஒன்றுபடத் தவறினல் வேறு எவராலும் எமது நாட்டு மக்களை யூ. என். பி. யின் கோரப் பிடியிலிருந்து விடுவிக்க முடியாது. எனவே முற்போக்கு-புரட்சிகர இயக்கங்கள் இதில் தீவிர அக்கறை காட்ட வேண்டும். அதே வேளை தொழிலாளி வர்க்கமும் ஏனைய மக்களும் அத்தகைய இயக்கங்களை நிர்ப்பந்தித்து யூ. என். பி. விரோத ஐக்கியப்பாட்டிற்கான நிலைமைகளைத் தோற்றுவித்து உறுதியான மக்கள் இயக்கம் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதுவே உடனடியான அவசியத் தேவையாகும்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

மேற்கண்டவாறு கடந்த 17-8-78 ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஹர்த்தால் ஞாபகார்த்த தினக் கூட்டத்தில் பேசும்போது கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச செயலாளர் தோழர் கே. செந்திவேல் கூறினர்.

தோழர் செந்திவேல் தொடர்ந்து பேசுகையில் ஒரு வெகுஜன எழுச்சி ஒரு போதும் திடீரென புரட்சியாக மாற மாட்டாது. அன்றைய ஹர்த்தாலை இன்னும் ஒருபடி தலைமை தாங்கியிருந்தால் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்க முடிந்திருக்கும் என்று சிலர் கூறிவருகின்றனர். இவர்கள் ரொட்ஸ்கியவாதிகளே அன்றி மாக்சிச-லெனினிசவாதிகளாக இருக்க முடியாது. வெகுஜன எழுச்சிகளின் மூலம் தொழிலாளி வர்க்கமும், வெகுஜனங்களும் பல அனுபவங்களைப் பெற்று எதிர் வரும் புரட்சிக்கான சக்தியைப் பெற்றுக் கொள்ளவும், அனுபவமில்லாக் கப் போராட்ட முறைகளைப் படித்துக் கொள்ளவும் முடியுமே தவிர திடீரென அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வது சாத்தியமாகாது

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறும்வரை எவ்விதமான புதிய தொழிற் சங்க கோரிக்கைகளையும் சண்முகதாசன் எழுப்பக் கூடாது. அப்படி கிளப்பினல் அது அவரின் வாதப்படி மாக்சிச-லெனினிசத்திற்கு எதிரான ஏமாற்றாகும். சண்முகதாசன் தானே தனக்கு எதிராக தர்க்கம் புரியும் பரிகாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். எனவே இருமேலாதிக்க வல்லரசுகளினதும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளினதும் அரசியல் பொருளாதாரப் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் மூன்றும் உலக நாடுகள் ஏகாதிபத்தியங்கள் அழிக்கப்படும்வரை இயக்கமற்று இருக்க முடியாது. அதன் பிடிக்குள் இருந்துகொண்டே அதற்கெதிரான தம்மைப் போன்று நசுக்கப்படும் பின்தங்கிய நாடுகளை ஒன்றிணைத்து அரசியல் பொருளாதார கோரிக்கைகளை முன்வைத்துப்போராடுவது தவிர்க்கமுடியாததாகும்.

இன்று ஒரு புதிய சர்வதேச பொருளாதார அமைப்புப் பற்றி பேசுபவர்கள் யார்? சிறிய நடுத்தர, வளர்ச்சி குன்றிய மூன்றும் உலக நாடுகளேயாகும். சர்வதேச அரங்குகளில் மேலாதிக்க வல்லரசுகளின் பொருளாதாரக் கெடுபிடிகளுக்கு எதிராக புதிய உலக பொருளாதார அமைப்பு வேண்டும் என்ற கோரிக்கையை மூன்றும் உலக நாடுகள் முன்வைக்கும் போது சீன அதற்கு ஆதரவு தெரிவிப்பது நியாயமானதேயாகும். மூன்றும் உலக நாடுகளின் இக்கோரிக்கையை மறுப்பவர்கள் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுமாகவேயுள்ளனர். உலகப் புரட்சி பற்றிஉலகின் இரண்டுவித பார்வைகள் உண்டு. ஒன்று மாக்சிச-லெனினிச-மாசேதுங் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட பார்வை. மற்றது ரொட்சிசத் தத்துவ அடிப்படையிலான பார்வையாகும். இந்த இரண்டு பார்வைகளும் இன்றைய தேசிய சர்வதேசிய நிலைமைகளிலும் பிரதிபலிக்கின்றன. நிச்சயமாக சண்முகதாசனின் தேசிய-சர்வதேசிய நிலைமைகள் பற்றிய பார்வை ரொட்சிசப் பார்வையே அன்றி மாக்சிச - லெனினிசப் பார்வை அல்ல.

★ இரு மேலாதிக்க வல்லரசுகளின் யுத்தக் கெடுபிடிகளை எதிர்த்தும்.

★ சமூக ஏகாதிபத்தியத்தின் பயங்கரத் தன்மையை அம்பலப்படுத்தியும்,

★ மூன்று உலகக் கோட்பாட்டை ஆதரித்தும்

## பகிரங்க கருத்தரங்கு

இடம்: உயர்கலை மன்ற மண்டபம்
ஆனைப்பந்தியடி யாழ்ப்பாணம்

காலம்: 16-9 78 மாலை 5-மணிக்கு

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிகளும், புரட்சிகர - முற்போக்கு இயக்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

இ. வா. ச. சம்மேளனம்
வடபிரதேசக் கமிட்டி

அச்சுப் பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம், 93, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியிடுபவர்: கே. சுப்பையா 45, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.